352
OFFICE OF THE REGISTRAR OF ... 1939 MADURAI

உ

# வைத்திய சந்திரிகா

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல் வாரத்தில் வெளிவரும்.

Vol. 1. April 1939. No. 5.

## விஷய சூசிகை.


| | | பக்கம். |
|---|---|---|
| சென்னை அரசாங்கமும் சுதேச வைத்யமும் | பத்திராதிபர் ... | 1–12 |
| ஔஷத சாரம் | பண்டிட் நாராயணய்யங்கார் ... | 20–31 |
| ஸஹஸ்ரயோகம் | டாக்டர் T. S சுப்ரமண்யம் ... | 40–47 |


**சந்தா விகிதம்.**

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| மாதம் 1-க்கு | பக்கம் 1-க்கு | ரூ 8 |
| ,, | ½-க்கு | ரூ 4 |
| ,, | ¼-க்கு | ரூ 2 |

கிடைக்குமிடம்:—

ஆயுர்வேத வைத்தியர், T. S. சுப்ரமண்யம்,
35, காக்காத்தோப்புத்தெரு, மதுரை.

Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher

...ங்கடேஸ்வர் பிரஸ், மதுரை—39.

[விலை 0—3—0

L:5ma211, N25rc
N39.1.5
2/10/71

# T. S. N. ரண நிவாரிணி என்னும் களிம்பு.

மேற்படி களிம்பு எல்லாவித வெட்டுக்காயங்கள், அடிபட்ட காயங்கள், வேனற்கட்டி, ரத்தக்கட்டி, முகப்பரு, சொறி, சிரங்கு, கரப்பான், மேகவிரணம், அக்கி, மேகப்படை, எச்சிற்தழும்பு, மூலமுளைகள், நெருப்புக் காயங்கள் முதலிய தோலில் வரும் சகல வியாதிகளுக்கும் மேலுக்கு உபயோகிக்கப்படும் ஓர் அத்யற்புதமான களிம்பு. இதை ஷெ வியாதிகளில் மேலுக்குத் தடவினால் எரிச்சல் முதலிய ஒருவித தொந்திரவுமின்றி மிகவிரைவில் குணப்படுத்துமென்பது திண்ணம். பலர் இதை உபயோகித்து நல்ல பலன் அடைந்திருக்கின்றனர்.

சிறிய பாட்டில் விலை அணா **5.** பெரிய பாட்டில் விலை அணா **9.**

தபாற் சிலவு வகையறா பிரத்யேகம்.

விலாசம்:— T. S. நாராயணசாமி அய்யர்.
சித்த ஆயுர்வேத வைத்தியர்
35, காக்காத் தோப்புத் தெரு, மதுரை.

---

# T. S. N. கர்ணபிந்து அல்லது காதுதைலம்.

இந்தத் தைலம் காதுகளில் உண்டாகும் குத்துவலி, சீழ் வடிதல், புண்கள், காதிரைச்சல், காதடைப்பு, சிலவகை செவிடு, முதலிய காதுகள் சம்பந்தமான எல்லா வியாதிகளையும் குணப்படுத்தும். குழந்தைகள் முதல் சகலரும் உபயோகிக்கலாம். பலர் உபயோகித்துப் பூர்ண குணம் பெற்றிருக்கின்றனர்.

**சிறியபாட்டில் $\frac{1}{8}$அவுன்ஸ் அணா 2 பெரியபாட்டில் $\frac{1}{2}$அவுன்ஸ் அணா 7**

இன்னும் எல்லாவித சாஸ்திரீயமான மருந்துகளும் இவ்விடம் கிடைக்கும்.

தபாற் சிலவு வகையறா பிரத்யேகம்.

விலாசம்:— T. S. நாராயணசாமி அய்யர்.
சித்த ஆயுர்வேத வைத்தியர்
35, காக்காத்தோப்புத் தெரு, மதுரை.

... REGISTRAR OF ...
18 APR 1939
MADRAS

# சென்னை அரசாங்கமும் சுதேசவைத்யமும்.

சுதேச வைத்யத்தின் அபிவிருத்தி விஷயத்தில் அரசாங்கத்தார் போதுமான ஆதரவு காட்டவில்லை யென்று பலருக்கு ஓர் எண்ணம் இருந்து வருவதை யாரும் ஆக்ஷேபிக்கமுடியாது. அரசாங்கத்தார் நடத்திவரும் சுதேச வைத்ய பாடசாலையும் ஆரம்பதினத்திலிருந்து ஒரேமாதிரியாக நடத்தப்பட்டு வருகிறதேயன்றி ஓரளவுகூட அபிவிருத்தி யில்லாமல் பழைய நிலைமையிலேயேயிருந்துவருவதும் பலரும் அறிந்தவிஷயம். சுதேச வைத்ய விஷயத்தில் வைத்ய இலாகா அதிகாரியான கனம் டாக்டர் ராஜன் அவர்களுடைய அபிப்பிராயமும் அன்னாருடைய உபன்யாசங்களால் தெளிவாகத் தெரிந்தபோதிலும் திராவிட வைத்யமண்டல காரியதரிசி திருச்சி ஆயுர்வேதாசார்ய ஸ்ரீமான் V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்கள் டாக்டர் ராஜன் அவர்களை சுதேச வைத்ய அபிமானியாகக்கருதி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்திகள் வெளிவந்த சில நாட்களுக்குள்ளேயே சுதேச வைத்ய விஷயமாக அன்னாருடைய மனோபாவம் வெளிப்படையாகத்தெரிந்துகொள்ள சந்தர்ப்பம் வாய்த்ததற்கு சந்தோஷிக்கின்றோம். 23—3—39-ல் அசெம்பளியில் நடந்த வாதத்தில் டாக்டர் ராஜன் அவர்கள் பேசியதின் சாரமாவது—“அசெம்பிளி மெம்பர்களில் சிலர் சுதேசவைத்ய விஷயத்தில் அரசாங்கத்தார் அபிமானக்குறைவுடன் இருப்பதாக புகார் கூறுகின்றனர். இந்த சுதேச வைத்ய இலாகாவில் சென்னை அரசாங்கத்தாருடைய கொள்கையைத் தூஷிப்பது மிகவும்அதர்மமென்றே சொல்லுவேன். மற்ற ஆயுர்வேத வைத்தியர்களைப் போலவே நானும் ஆயுர்வேதத்தைப் பூர்ணமாகக் கற்றவனென்று பாத்தியம் கொண்டாடுவேன் நான் ஆயுர்வேத நூல்களைத் தர்ஜமா செய்திருக்கிறேன். ஆயுர்வேத நிபுணர்களுடைய காலடிக்கீழ் அமர்ந்து ஆயுர்வேத முறைகளைக் குருமுகமாகப்பயின்றுள்ளேன். இவ்விதமிருக்க நானே அந்த முறையை அலக்ஷியம் செய்வதாகப் புகார் சொன்னால் ஆயுர்வேதத்தைப்பற்றி நான் தெரிந்துகொண்டிருப்பதை அவன் அறியமாட்டானென்றே சொல்லுவேன். பெயர்களிலும் முறைகளிலும் எனக்கு பேதம் கிடையாது. ஆயுர்வேத முறையை அலோபதி

2/10/71 சென்னை-600 008.

முறையாகவே கருதுகின்றேன். யூனனி முறையை அலோபதி முறையாகவே கருதுகின்றேன். அலோபதி என்பது மேல்நாடுகளி லுள்ள வைத்திய முறையை மாத்திரம்தான் குறிக்குமென்று நான் நினைக்கவில்லை. இருந்தாலும் சுதேசவைத்தியர்கள் மேனாட்டு முறையில் தேர்ந்தவர்களுக்குச் சமானமான அந்தஸ்து தங்களுக் கும் வேண்டுமென்று நிர்ப்பந்திக்கும்பொழுது நான் சங்கடப்பட வேண்டியிருக்கின்றது. பழைய நாட்களில் ஆயுர்வேதம் ஜனங் களுக்கு மிகுந்த நன்மைசெய்ததென்பதை யாரும் ஆக்ஷேபிக்க முடியாது. சென்ற சில நூற்றாண்டுகளாக ஆயுர்வேதத்தில் அபி விருத்தி தடைப்பட்டிருப்பது நமக்குத் தெரியும். பல நூற்றாண்டு களாக ஏற்பட்டுள்ள குறையை ஒரே நாளில் சீர்படுத்தமுடியுமா? மேல்நாட்டு முறைகளிலுள்ள சாராம்சத்தை ஆயுர்வேத முறையில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து அதை உருப்படுத்தி மேல் நாட்டு முறைகளுக்கு சம அந்தஸ்தில் அதை அபிவிருத்திக்குக் கொண்டுவர யத்னம் செய்யவேண்டியிருக்கிறது. ஆயுர்வேதம் குற்றமற்ற முறையென்றும் மேல்நாட்டு முறை அகற்றுத்தணிந்த தென்றும் சில ஜனங்கள் பேசுவது எனக்குச் சற்றும் விளங்க வில்லை. அது கேவலம் சுதேசாபிமானம் அல்லது மனப்போக்கை ஒட்டியதேயன்றி பகுத்தறிவிற்கும் யுக்திக்கும் பொருந்தியதல்ல.

## மேல்நாட்டுமுறைகளுடன் ஒப்பிடவே முடியாது.

மேல்நாட்டு முறை சாஸ்திர வைத்தியத்தில் விஸ்தாரமாக அபிவிருத்தி யடைந்திருக்கிறது. எக்ஸ்ரே, ரேடியோ, ஸ்திரீ ரோகங்கள், பிரசூதி சிகித்சை, இன்னும் பல விஷயங்களிலும் ஏராளமாக அபிவிருத்தியடைந்திருக்கிறது. இவ்விஷயங்களை ஆயுர் வேதம் தொடக்கூடவில்லை. சாஸ்திர முறைகளாலும் யுக்திக்குப் பொருந்திய முறைகளாலும் மேல்நாட்டு வைத்யம் குணப்படுத்தும் ரோகங்களை சில மந்திரங்களாலும் சில மூலிகைகளாலும் குணப் படுத்தக்கூடுமென ஆயுர்வேதம் கூறுகின்றது. 40 நாட்களாக தண்ணீரும் ஆகாரமும் உட்கொள்ளாமல் ஓர் மனிதன் ஜீவித்திருப் பதாக இப்பொழுது இவ்விடத்தில் (அசெம்பளியில்) பேசப்பட வில்லையா அதைப்போலவே ஆயுர்வேதத்திலும் அங்கு மிங்குமாக

ஏதோ சில நல்ல மூலிகைகள் சொல்லப்பட்டிருக்கலாம். நாமெல்லோரும் சித்தர்களாக ஆகாதவரையில் வெறும் கண்களாலேயே நோயாளியின் உடற்கூறு அறிவதும் தைவிக சக்திகளால் நோய்களைக் குணப்படுத்துவது மாகிய இவையனைத்தும் சாத்திய மல்ல. நாமனைவரும் சித்தர்களாக ஆகி தைவிக சக்திகளை யுடையவர்களாகும் வரை சாஸ்திரம் நமக்கு உதவும் கருவிகளின் உதவியை நாடவேண்டியது அவசியமாகின்றது. மருந்துகளையும் வைத்ய சாஸ்திரங்களையும்பற்றி பெருமைப்படுத்திப் பேசுவதில் பயனில்லை. ஆயுர்வேத மருந்துகள் நல்லவைகளாக இருக்கலாம். இன்றைக்கும் அவை அவ்விதமே யிருக்கலாம். சாஸ்திரிய முறையில் வியாதியை யறிவதிலும் அவ்விதமே சிகித்சை செய்வதிலும் மேல் நாட்டு வைத்யம் விஸ்தாரமாக அபிவிருத்தி யடைந்திருக்கிறது.

சென்னை தேசிய வைத்ய பாடசாலையில் பாட புஸ்தகங்களே இன்றும் ஏற்படவில்லை. ஷை பாடசாலை சென்ற 12 வருஷங்களாக நடந்துவருகின்றது. ஆனால் பாட புஸ்தகங்கள் ஏற்படாமலே இன்னும் நடந்துவருகிறதென்பதை நாம் வருத்தத்துடன் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது. பாட புஸ்தகங்களின் ஜாபிதாவை அனுப்பும்படி நான் பாடசாலை அதிகாரிகளைக் கேட்டபோது அவர்கள் டயம்டேபிளை (பாடசாலையில் நடக்கும் பாடங்களின் கால அட்டவணையை) அனுப்பினார்கள். நான் மறுபடியும் பாட புஸ்தகங்களின் ஜாபிதாவை யனுப்பும்படி கேட்டதற்கு அவ்வித பாட புஸ்தகங்கள் வைக்கப்படவில்லை யென்றும் உபாத்தியாயர்கள் தாங்களாகத் தயாரித்திருக்கும் குறிப்புகளிலிருந்து பாடம் சொல்லிக்கொடுப்பதாகவும் தகவல் கிடைத்தது. இவ்விஷயத்தை நான் வெளியிட்டிருக்கவே மாட்டேன். பத்திரிகைகளிலும் மேடைகளிலும் மற்றும் பலவிதமாகவும் அடிக்கடி எங்களை அநியாயமாகத் தாக்கிப்பேசுவது காரணமாகவே இந்த உண்மையை நான் இப்பொழுது வெளியிடும்படி நேர்ந்தது. தேசிய உணர்ச்சியும் தேசிய அபிமானமும் போற்றத்தக்கதே. ஆனால் மனிதர்கள் நோய்வாய்ப்பட்டு கஷ்டப்படும் காலத்திலும் சிகித்சை விஷயங்களிலும் இவைகளுக்கு இடம் கிடைக்கமாட்டாது. ஆயுர்வேதம்

நவீன சாஸ்திரீய ஆராய்ச்சிகளுக்குப் பொருத்தமா யிருக்கும் அளவு வரையில் அதை நான் கௌரவிக்கத் தயார். இந்தியப்புதல்வன் என்ற முறையில் அதன் புனருத்தாரணத்திற்கும் பிரசாரத்திற்கும் என்னால் சாத்தியமான அளவு பிரயத்தினப் செய்யவும் கடமைப்பட்டவன். சில நூற்றாண்டுகளாக ஆயுர்வேதத்தில் புகுந்திருக்கும் குற்றங்களைக் கவனிக்காமல் கண்களை மூடிக்கொண்டிருக்க நான் சம்மதிக்கமாட்டேன். நாம் உண்மை தேசாபிமானிகளாக விருந்தால் நாமனைவரும் ஒன்றுசேருவோம். அதன் குற்றங்களை விலக்குவோம். நவீன ஆங்கில வைத்யத்தின் அந்தஸ்துக்கு உயர்த்துவோம். அப்படி உயர்ந்த பிறகல்லவோ அதைச்சரிசமானமாக நடத்தவில்லை யென்ற புகார் கூற சந்தர்ப்பம் நேரும். ஒரு பாடசாலை, அதற்கு இன்னின்ன பாடங்கள் என்ற விதி கிடையாது. அதற்குப் பாடபுஸ்தகம் கிடையாது. இந்த நிலைமையில் ஆங்கில வைத்தியத்திற்கு சம அந்தஸ்து அதற்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்பதற்கு நியாயமே யில்லை.

இந்திய மூலிகைகளில் ஆராய்ச்சி—சென்னை இந்த வைத்ய பாடசாலை பிரின்சிபால் அவர்களைக் கேட்டபொழுது மருந்துமுறைகளைப்பல இடங்களிலிருந்து தத்காலம் ஒன்றுசேர்த்து வருவதாகவும் அதிலிருந்து பாடசாலைப் பிள்ளைகளுக்குக் குறிப்புகள் கொடுத்துவருவதாகவும் இனி நாளடைவில் பாட புஸ்தகங்களைத் தயாரித்துவிடலாமென்றும் அவர்கள் சொன்னார்கள். நவீன ஆங்கில முறைகளில் ஆராய்ச்சி என்பதற்கு எந்த அர்த்தம் சொல்லப்படுகின்றதோ அந்த அர்த்தத்தில் ஆராய்ச்சி என்பது சுதேச முறைகளுக்குப் பொருந்ாதென்றும் பிரின்சிபால் அவர்கள் கூறிவிட்டனர். இவ்விதம் பிரின்சிபால் சொல்லிவிட்டதால் எங்கள் கைகள் கட்டுப்பட்டுவிட்டன. சென்னையில் ஆங்கில வைத்திய கலாசாலையில் சுதேச வைத்யச்சரக்குகளின் ஆராய்ச்சிக்காக ஓர் ஸ்தாபனம் இருக்கிறது. அந்த ஸ்தாபனத்தால் சென்னை அரசாங்கத்திற்கு ஏராளமான துகை சிலவாகின்றது. இந்த ஸ்தாபனத்தை இந்திய வைத்திய பாடசாலை பயன்படுத்திக்கொள்ளவில்லை யென்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்ளவேண்டி யிருக்கின்றது. இந்திய

வைத்யசாலை அதிகாரிகள் ஆராய்ச்சிக்காகத் தங்கள் மருந்துசரக்குகளை அந்த ஸ்தாபனத்திற்கு நாளது வரை அனுப்பவுமில்லை. அந்த ஸ்தாபனத்தின் வேலைகளில் உதவியும் புரியவில்லை. சுதேச வைத்யச்சரக்குகளைப் புனருத்தாரணம் செய்வதற்காக அந்த ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அவ்விதமிருந்தும் அதை பயன்படுத்திக்கொள்ளவில்லை. அந்த ஸ்தாபனத்தை நாம் எடுத்து விடுவோமேயாகில் ஆயுர்வேதத்தையும் சுதேச வைத்யத்தையும் அரசாங்கத்தார் கெடுத்துவிட்டதாகக் கூக்குரல் கிளம்பும். பொறுமையும் உழைப்பும் ஆராய்ச்சிக்கு அவசியமானவை. ஆராய்ச்சியென்பது மிகவும் மெதுவாக நடத்தவேண்டிய ஓர் முறை. இந்த ஆராய்ச்சியில் குதூகலமுள்ள நூற்றுக்கணக்கான நிபுணர்கள் தங்கள் காலத்தையும் மற்றும் அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டும். சுதேச வைத்யம் சம்பந்தப்பட்டமட்டில் அம்மார்க்கத்தில் ஒரு பிரயத்தினமும் செய்யப்படவில்லையென நான் வருத்தப்படுகின்றேன். ஆகவே உபாத்தியாயர்களும் சுதேச வைத்யர்களும் ஆயுர்வேத முறைகளை சாஸ்திரீய முறையில் அமைக்கவேண்டுமென்றும், நவீன வழிகளில் பொருத்தவேண்டுமென்றும், மனப்பூர்வமாகவும் பலனுள்ள ரீதியிலும் அவைகளை சீர்திருத்தவேண்டுமென்றும், அவைகளில் ஜீவகளையை அதிகம் புகுத்தவேண்டுமென்றும், அவைகளுக்காக அதிகம் தியாகம் செய்யவேண்டுமென்றும் நான் கூசாமல் சொல்லுவேன்.

வேறு மாகாணத்திலிருந்து வந்த ஓர் நிபுணர் சமீபத்தில் சென்னை இந்திய வைத்ய பாடசாலையைப் பார்வையிட்டபோது அதன் உபகரணங்களைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டார். ஆனல் அவ்விடத்தில் மேல்நாட்டு வைத்யமுறையைக் கற்பிக்க வைத்திருந்த சாமான்களின் தராதரத்தைக்கண்டு நகைத்தார். சிறிய அலமாரிகளில் சில சீசாக்களில் கெமிகல்ஸ் வைக்கப்பட்டிருந்தன. இதுதான் கெமிகல் லேபரேடரியாம். சுவல்ப உபகரணங்களும் சாமான்களும் உள்ள இடம் பிசிக்ஸ் லேபரேடரியாம். (இதைப்பார்த்து ஷை நிபுணர் கேலிசெய்தார்) ஷை லேபரேடரிகளை விஸ்தாரமாக வைக்க அரசாங்கத்தார் போதிய பணஒத்தாசை

செய்யவில்லையெனச் சொல்லக்கூடும். உண்மைதான். அந்தப் பாடசாலையில் பொறுப்பேற்ற அதிகாரிகள் ஆராய்ச்சிக்கும் சாஸ்திரீய வேலைகளுக்கும் தேவையான லேபரேடரிகள் வேண்டுமெனக் கேட்டார்களா? ஒரு மனு கூட போடவில்லை. அரசாங்கத்திற்கு அவமதிப்பை யுண்டுபண்ணவேண்டுமென்றே சொல்லப்படும் தூஷணங்களை அநீதமென ருசுப்படுத்தவே இந்த சந்தர்ப்பத்தை உபயோகிக்க விரும்பினேன்.

L. I. M. களுக்கு அரசாங்கத்தார் செய்த நன்மை:—இந்திய வைத்ய பாடசாலைக்கு முன்போலவே இப்பொழுதும் அரசாங்கத்தார் சிலவுசெய்து வருகின்றனர். ஆயுர்வேத வைத்யர்களை பொது சுகாதாரப்பயிற்சி பெறும்படி இப்பொழுது அதிகப்படி வசதி செய்திருக்கின்றனர். இம்முயற்சி எப்படி முடியுமென்பது எனக்குத்தெரியவில்லை. இருந்தபோதிலும் துணிந்து இவர்களுக்கு இப்பயிற்சியளிக்க முன்வந்தேன். இந்தப்பாடசாலையில் Midwifery (பிரசவ சிகித்சை)க்குப்போதிய வசதி கிடையாது. பிரசவ சிகித்சையில் போதிய அறிவும் அநுபவமுமில்லாமல் L. I. M. என்று பட்டம்பெற்று இந்தப் பாடசாலையிலிருந்து லேடி டாக்டர்கள் வெளியேறுவதை நினைக்க என் மனம் துடித்தது. ஆகவே இப்பாடசாலையில் படிக்கும் லேடி டாக்டர்களுக்கு ஸ்திரீ ரோகங்களிலும் பிரசவ சிகித்சையிலும் கோஷா ஆஸ்பத்திரியில் ஆறுமாத காலம் பயிற்சியளிக்க தத்காலம் புதிதாக ஏற்பாடு செய்திருக்கிறோம். இதற்கு முந்திய அரசாங்கம் அளித்திராத பல புதிய வசதிகளை L. I. M. களுக்கு தத்காலம் நாங்கள் அளித்திருக்கின்றோம். இந்திய வைத்ய பாடசாலை பிரின்சிபாலும் மற்றும்பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் ஒத்துழைத்தால் ஓர் ஆஸ்பத்திரி மாத்திரமல்ல அரை டஜன் ஆஸ்பத்திரிகளில் வேலைசெய்யும்படி அநுமதிக்கின்றோம். ஆனல் சுதேச வைத்யர்கள் ஆங்கில ஆஸ்பத்திரிகளில் வேலைசெய்யத் தயாராக இருக்கமாட்டார்களென அஞ்சுகின்றேன். தங்கள் வைத்ய முறை வேறுபட்டதெனக் காரணம் கூறுவார்கள். அறிவை வளர்க்க விருப்பம் இருக்குமாகில் இவ்விதம் ஆக்ஷேபம் கூறுவது நியாயமாக மாட்டாது. அதே பாடசாலையில் படித்துத் தேறியவர்களே பாடசாலை மாணுக்கர்களுக்கு பரீக்ஷைகளை நடத்த

வேண்டுமென்றும்மற்றவர்கள்கூடாதென்றும்சொல்லப்படுகின்றது. இந்த நிலைமையில் அந்த ஸ்தாபனத்தின் படிப்பு, அந்தஸ்து முதலிய வைகளின் உண்மை நிலைமை யென்னவென்பதை பிறர் எவ்விதம் அறிந்துகொள்ள முடியும்? சாதாரணமாக வைத்யப்படிப்பிற்கு அவசியம் வேண்டிய விஷயங்களில் பல விஷயங்கள் அப்பாடசாலை யில் கிடையாது''.

இவ்விதம் டாக்டர் ராஜன் அவர்கள் சுதேச வைத்யம், சுதேச வைத்ய பாடசாலை, பிரின்சிபால், ஆக மூன்று விஷயங்களையும் தாக்கிப்பேசி யிருப்பதற்குப் பதிலாக ஷை பாடசாலை பிரின்சிபால் ஸ்ரீமான் G. ஸ்ரீநிவாஸமூர்த்தியவர்கள் 1—4—39-ல் பேசியிருப்ப தன் சாரத்தைக் கீழே குறிப்பிடுகின்றோம். "இந்திய வைத்ய பாடசாலையில் படித்த மாணுக்கர்களுக்கு உயர்ந்த அந்தஸ்து வரப் போகின்றதென்பது என் நம்பிக்கை. இப்பாடசாலை மாணுக்கர்கள் தன்னைப்பற்றிக் குறைவாக நினைக்கக் காரணமேயில்லை. அவர் களுக்குப் படிப்பும் பயிற்சியும் போதியவளவு கொடுக்கப்பட்டிருக் கின்றது. ஆகவே அவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றப் போதியவளவு திறமையிராதோ வென்ற எண்ணமே உதிக்க நியாய மில்லை. இந்தப்பாடசாலை யதிகாரிகள் தான் படிப்பு சம்பந்தமான முறைகளை நிர்ணயிக்கவேண்டியவர்களே யன்றி சுதேச வைத்யமே யின்னதென்று அறியாத ஆங்கில வைத்யர்கள் அல்ல. சுதேசவைத் யம் கற்றுக்கொடுக்காத ஆங்கில வைத்ய காலேஜுகள் இத்தேசத் தில் இருக்கக்கூடாது என்பது என் அபிப்பிராயம். இந்திய வைத் தியத்தில் ஓரளவுகூட பரிசயமில்லாத வைத்யர்கள் இத்தேசத்தில் வைத்யம் செய்ய அனுமதிக்கப்படக்கூடாது. இந்தப்பாடசாலை யில் பாடவிதிகள் (இதற்கு ஸிலபஸ் என ஆங்கிலம்) கிடையா தென்று குறை கூறப்படுகின்றது. நடந்தவிஷயமென்னவெனில் டாக்டர் ராஜன் அவர்கள் இப்பாடசாலையின் பாட விதிகளை யனுப் பும்படி கேட்டபொழுது அச்சமயம் ஆக்டிங் பிரின்சிபாலாக இருந் தவர் டயம்டேபிளின் காபி ஒன்றையும் பாடசாலையின் பிராஸ்பெக் டஸ் ஒன்றையும் அனுப்பியிருந்தார். அந்த பிராஸ்பெக்டஸ்ஸை ஊன்றி கவனித்திருந்தால் பேக்டீரியாலஜி (வியாதிகளுக்குக்காரண

மான கிருமிகளைப்பற்றிச் சொல்லும் சாஸ்திரம்) முதலிய அவசிய மான விஷயங்கள் பாடசாலையில் கற்பிக்கப்படுவது புலப்பட்டிருக் கும். ஒரு பிராஸ்பெக்டஸில் பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடங் களின் பூர்ண விவரங்களும் வரிசைகளும் அச்சடிக்கவேண்டிய அவசியமில்லை. ஸிலபஸ் என்பது உபாத்தியாயர்களுக்கு ஓர் வழி காட்டியேயல்லாது அதில் பூர்ண விவரங்களும் அடங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. இப்பாடசாலையால் மிகுந்த பலன் ஏற்பட்டுள்ளது. இந்த ஸ்தாபனம் நன்கு அபிவிருத்தியடைந் திருக்கின்றது. இப்பாடசாலையைப்பற்றிச் சொல்லப்படும் அவ தூறுகள் மறுக்கப்படும்படி மாணுக்கர்கள் தங்கள் திறமையைக் காட்டவேண்டும்."

இவ்விதம் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸமூர்த்தி அவர்கள் பேசியிருப் பது நமக்கு மிகவும் வியப்பாக விருக்கின்றது. சுமார் 14 வருஷ காலமாக இந்திய வைத்ய பாடசாலையைத் திறம்பட நடத்தி ஓர் பொறுப்புவாய்ந்த பதவியை வகிக்குமிவர் சுதேச வைத்யத்தின் தத்வத்தை நன்கு உணர்ந்திருக்கக்கூடுமென நினைக்கும் பொது ஜனங்களுக்கு இவர் உபன்யாசம் ஓரளவு ஏமாற்றத்தை யுண்டு பண்ணுவதாகவிருக்கின்றது. டாக்டர் ராஜன் அவர்கள்உபன்யா சம் மூன்றுவிஷயங்களைப்பற்றியதாகப் பிரிக்கலாம். சுதேச வைத்ய விஷயமாக அவர் பேசியது எல்லோருமே கவனிக்கவேண்டிய பொது விஷயமாக ஆகும். ஆனல் வைத்ய பாடசாலை விஷயமாக வும் பாடசாலைத்தலைவர் விஷயமாகவும் அன்னர் பேசியதற்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு பாடசாலைத்தலைவரான ஸ்ரீமான் ஸ்ரீநிவாசமூர்த்தியவர்களைச் சேர்ந்ததேயாகும். ஸிலபஸ் இல்லா மலே பாடசாலை நடந்துவருவதாக டாக்டர் ராஜன் அவர்கள் சொல் லியுள்ள முக்கிய விஷயத்திற்குத் தகுந்த பதில் சொல்லவேண்டி யது பாடசாலைத் தலைவரைச்சார்ந்தது. ஸிலபஸ் என்பது பாட சாலையில் ஒவ்வொரு வருஷமும் நடக்கவேண்டிய பாடங்களின் பகுதி பாடபுஸ்தகங்களின் விவரம் முதலியவற்றைக் குறிக்கும் ஆங்கில வார்த்தை. தமிழ், ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம், முதலிய பாஷைகளைப் போதிக்கும் கலாசாலைகளில் ஸிலபஸ் இருந்து வரு

வது யாவரும் அறிந்ததே. அவ்விதமே வைத்ய பாடசாலையிலும் இருந்து தீரவேண்டியது அவசியம். அகில இந்திய ஆயுர்வேத மகாமண்டல பரீக்ஷகளில் ஸிலபஸ் இருப்பதை யாவரும் கவனிக்கலாம். பாடசாலையின் பிராஸ்பெக்டஸ்ஸை ஊன்றி கவனித்தால் ஸிலபஸ் புரியும் என்று பதில் சொல்லுவது கொஞ்சமும் பொருந்தாது. ஏன் ஸிலபஸ்ஸை சுலபமாக யாரும் அறியும்படி வெளியிட்டு இருக்கக்கூடாது. ஸிலபஸ் இருந்தே தீரவேண்டுமென்று நிர்பந்தம் கிடையாதென்று பொருள் படும்படி பேசியதும் முன்னுக்குப்பின் முரண்பட்டதாகும். உண்மையில் ஸிலபஸ் வேண்டிய அவசியமில்லை யென்று இவர் நினைப்பாரே யாகில் அதைப் பட்டவர்த்தனமாக அவ்விதமே சொல்லியிருக்கலாம். அவ்விதம் சொல்லவும் தைரியமில்லையென்று அன்னார் உபன்யாசத்தால் தெரிகிறது. சென்னை வைத்ய பாடசாலையில் ஸிலபஸ் இல்லை என்பதை வியக்தமாகவே ஆக்டிங் பிரின்சிபால் அவர்கள் காரைக்குடியில் 12—2—39-ல் செய்த உபன்யாசத்தால் நன்கு விளங்குகின்றது. அன்னார் செய்த உபன்யாசத்தின் சாரமாவது—சித்த வைத்யம் (தமிழ் வைத்யம்) உலகத்தில் முதன்முதலாக ஏற்பட்ட வைத்யம். இந்த வைத்யம் பல காலமாகப்பற்பலமாறுதல்களைத் தாண்டவேண்டியிருந்ததால் அது சிதைந்தும் ஒழுங்கீனமாகவும் தற்காலம் இருந்து வருகிறது. நான் அறிந்தமட்டில் சித்த வைத்தியத்தில் வியாதிகளின் நிதானம் ரூபம் சிகித்சை இவைகளைச் சொல்லும் புஸ்தகங்கள் கிடையா. ஏதோ சில வியாதிகளைப்பற்றி இங்குமங்கும் குறிப்புகள் இருக்கின்றனவேயன்றி விவரமாகச் சொல்லப்படவில்லை. ஒழுங்கான முறையில் எந்த விஷயத்தைப்பற்றியும்பூர்ணமாகச்சொல்லும் ஒரு புஸ்தகம்கூட சித்தவைத்யத்தில் கிடையாது. ஆகவே மற்ற வைத்தியர்களைக் காட்டிலும் சித்தவைத்தியர்களுக்கு அதிகமான பொறுப்பு தற்காலம் ஏற்படுகின்றது. பழைய ஓலைச் சுவடிகளைத்தேடி கூடிய சீக்கிரம் அவைகளை அச்சுக்குக்கொண்டு வரவேண்டும். சித்த வைத்யர்கள் தங்களுக்குள் ஓர் அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு சித்த வைத்தியத்தை ஒன்றுபடுத்த முயற்சி எடுத்துக்கொள்ளாவிட்டால் சித்த வைத்யர்கள் பொதுஜன ஆதரவை யிழப்பதுடன் கடைசியாக அரசாங்க ஆதரவையும் இழப்பார்கள் என நான் எச்சரிக்கை செய்கின்றேன்."

இவ்விதம் ஆக்டிங் பிரின்சிபால் அவர்கள் சித்த வைத்யத்தில் பாடசாலைக்கு வேண்டிய பாட புஸ்தகங்களே கிடையாதென்றும் ஆகவே ஸிலபஸ் இல்லையென்பதை வெளிப்படையாக சொல்லி யிருப்பதை அனுசரித்தே டாக்டர் ராஜன் அவர்களும் பேசியிருப்ப தால் இதை ஸ்ரீநிவாஸமூர்த்தி அவர்கள் மறுக்கமுடியாமல் ஒப்புக் கொண்டே தீரவேண்டியதாகின்றது. ஆராய்ச்சி விஷயமாக அர சாங்க ஸ்தாபனத்தை பயன்படுத்திக்கொள்ளவில்லை என்ற மூன்று வது முக்கிய புகாருக்கும் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸமூர்த்தி அவர்கள் தகுந்த பதில் அளிக்காதது வருந்தத்தக்கதே.

சென்னை அரசாங்கத்தார் நியமித்த உஸ்மான் கமிட்டியில் காரியதர்சியாக ஸ்தானம் வகித்த ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸமூர்த்தியவர் களுக்கு சுதேசவைத்யத்தின் தத்வம்பூர்ணமாகத் தெரிந்தே இருக்க வேண்டும். பாடபுஸ்தகங்களே யில்லாத ஓர் முறையைப் பூர்ண மான முறையென எப்படி முடிவுக்கு வந்தார். பூர்ணமான முறை யெனச் சிபார்சுசெய்து 14 வருஷமாக பாடசாலைத் தலைமையையும் வகித்துக் கடைசியாக இப்பொழுது பாட புஸ்தகங்கள் இல்லை யென்று கையை விரிப்பது உசிதமா. பாட புஸ்தகமே இல்லாத பாடசாலையிலிருந்து தேறி வெளிவரும் வைத்யர்களிடத்தில் பொது ஜனங்களுக்கு நம்பிக்கை எவ்விதம் உதிக்கும். பாட புஸ்த கங்களே யில்லாமல் நாங்கள் பரீக்ஷை தேறியவர்கள் என அவர்கள் சொல்லிக்கொள்ள சங்கோசப்படமாட்டார்களா. இப்பாடசாலை யால் சுதேச வைத்தியத்திற்கு மேன்மை வருமா அல்லது தாழ் மை வருமா என்பதைப் பாடசாலைத் தலைவரே கவனிக்கும்படி வேண்டுகிறோம். தவிர இப்பாடசாலையில் தமிழ், சம்ஸ்கிருதம், யூனானி என்ற மூன்று வைத்தியம் தனித்தனியாகப் போதிக்கப் படுகின்றது. இவைகளுள் தமிழ், சம்ஸ்கிருதம், ஆகிய இந்த இரண்டு வகுப்புகளில் சேர்க்கப்படும் மாணாக்கர்களுக்கு தமிழ், சம்ஸ்கிருதம் ஆகிய இந்தப்பாஷைகளில் பூர்ண பாண்டித்யம் இருப் பது அவசியமென்பதையாரும் ஆக்ஷேபிக்கமுடியாது. ஆனால்நடை முறையில் ஷை மாணாக்கர்களுக்கு ஆங்கில பாண்டித்யமே முக்கிய மாகக் கவனிக்கப்படுகின்றது. S. S. L. C. என்ற ஆங்கில பரீ

க்ஷை தேறியவர்களே அந்தப்பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர். இவர்களுக்கு தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் போதிய கியானம் இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது. சுதேச வைத்ய பாடசாலையில் சுதேச பாஷை கவனிக்கப்படாமல் ஆங்கில பரிசயமே முக்கியமாக கவனிக்கப்பட்டால் சுதேச வைத்திய வளர்ச்சிக்கு இடையூறு ஆகமாட்டாதா. சரகம் சுச்ருதம்போன்ற புஸ்தகங்கள் பாஷாகியானம் பூர்ணமாக இல்லாதவர்களுக்கு விளங்குமா. அல்பகியானமுள்ளவர்களுக்கும் இப்புஸ்தகங்கள் விளங்குமென்றால் ஆங்கிலத்தில் அல்பகியானமுள்ளவர்களுக்கும் ஆங்கில வைத்ய நூல்கள் விளங்கலாமே. அவ்விதமாகில் ஆங்கிலத்தில் S.S.L.C. பரீக்ஷை தேறியிருக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தமெதற்காக. இவ்விதமே தமிழில் போதிய பரிசயமற்றவர்களுக்கும் தமிழ்நூல்கள் விளங்குவதும் கடினமே. ஆங்கில பரீக்ஷைகள் தேறியவர்களுக்கே ஆங்கில வைத்ய பாடசாலைகளில் பிரவேசம் அனுமதிக்கப்படுவதுபோல தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் சிரோமணி வித்வான் முதலிய பரீக்ஷை தேறியவர்களுக்கே இந்திய வைத்ய பாடசாலையிலும் பிரவேசம் அனுமதிக்க வேண்டியது அவசியமல்லவா. அவ்விதம் பிரவேசம் பெறும் மாணுக்கர்களால் சுதேச வைத்யம் அபிவிருத்தி யடையுமா அல்லது பாஷாபரிசயம் மிகவும் குறைந்த மாணுக்கர்களால் அபிவிருத்தி யடையுமா வென்பதைப்பொது ஜனங்களே கவனிக்கும்படி இதோடு நிறுத்துகிறோம்.

வைத்யர்கள் ஒரே மாதிரியாக விருக்கவேண்டுமென்றும் அதற்குப் பாடங்கள் ஒரே மாதிரியாக கற்பிக்கப்படவேண்டுமென்றும் இங்கிலீஷ் வைத்யர்களெல்லாரும் சுதேச வைத்யத்தையும் கற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்றும் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸமூர்த்தி அவர்கள் நினைப்பதும் பகற்கனவே. ஏதோ சில மருந்துகளுடன் சுதேச வைத்யம் அடங்கிவிடுவதாகவிருந்தால் இங்கிலீஷ் வைத்ய மாணுக்கர் அனைவருக்கும் ஒரு வருஷம் அல்லது 6 மாதம் பயிற்சி கொடுத்துவிடுவது சுலபமாகும். சுதேச வைத்யமென்பது மருந்து ஜாப்தாவுடன் நின்றுவிடுவதில்லையே. சுதேச வைத்

யத்தில் முக்கியமான பஞ்சகர்மாக்கள் விளங்கவேண்டும். அதற்கு தோஷங்களின் விபாகம் தெரியவேண்டும். ஆகவே அஷ்டாங்க ஹிருதயம் சரகம் அல்லது சுச்ருதம் ஆகிய இப்புஸ்தகங்கள் முழுவதும் படிக்காமல் சுதேச வைத்யம் பிடிபடாது. அதற்கு சம்ஸ்கிருதத்தில் பூர்ண அறிவும் மற்றும் பல பரிசயமும் வேண்டும். சுதேச முறைகளில் டாகடர் ராஜன் அவர்கள் கூறிய குறைகளை அடுத்த சஞ்சிகையில் கவனிப்போம்.

---

## வைத்தியச் செய்திகள்.

## சுதேச வைத்திய ஸபை, மதுரை.

சுதேச வைத்திய ஸபையின் ஆதரவில் நாளது 1939௵ மார்ச்சுமீ 19௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு மதுரை காக்காத்தோப்புத்தெருவிலிருக்கும் சூரியநாராயணசாஸ்திரியார் பாடசாலையில் ஸ்ரீமான் K. சம்பந்தம் பிள்ளை அவர்கள் மதுரை டிஸ்டிரிக்ட் போர்டு எஜுகேஷனல் ஆபீஸர் தலைமையில் சுதேச வைத்தியர்களின் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் ஸ்ரீமான் 'டாக்டர் V. குமாரமேனன் அவர்கள் சிரோரோகமும் சிரோபஸ்தியும்' என்ற விஷயத்தைப்பற்றி விரிவாக உபன்யசித்தார்கள். மற்றும் பலரும் ஷை விஷயத்தைப்பற்றிப் பேசினார்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவுபெற்றது.

டாக்டர் T. S. சுப்ரமண்யம்.
காரியதரிசி.
சுதேச வைத்திய ஸபை, மதுரை.

பிறகுபானை நிரம்ப மணல்கொட்டிப் பானைவாயை அகலால் மூடி சந்து வாய்க்கு இலேசாகச்சீலைமண் செய்யவும். பிறகு அடுப்பேற்றி கடும்தீயாக 24 மணி ஏதாவது ஒரு ஜாதி விறகால் எரிக்கவும். இதற்கு வாலுகாயந்திரமென வடமொழியில் சொல்லுவார்கள். வாலுகா என்றால் மணல் எனப்பொருள். நன்றாக ஆறவிட்டு எடுத்தால் சீசாவில் இருக்கும் பஸ்மம் சில சமயங்களில் வெளுப்பும் சிகப்பும் கலந்ததாக இருக்கும். சில சமயங்களில் சற்று கறுப்பாகவும் கிடைக்கும். நன்றாகத்தீ தாக்கினால் முதலில்சொன்ன நிறமும் தீக்குறைவால் பின்சொன்ன நிறமும் காணும். பிச்சு என்றால் பித்தமெனப்பொருள். பிச்சுகள் கிடைப்பது துர்லபமானால் பிச்சுகளின் பாவனை இல்லாமலே மருந்தை உபயோகிக்கலாம். பிச்சுகள் சேர்க்காமல் உபயோகித்து மிகுந்த குணம் பார்த்திருக்கிறோம். இம்மருந்து சற்றும் துர்குணம் கொடுப்பதில்லை. பஸ்மமாகாத பாஷாணங்களும் அவைகள் சேர்ந்த மருந்துகளும் சில வேளைகள் தான் உபயோகிக்கலாம். பிறகு சிலவேளை நிறுத்தியே பிறகு அவசியமானால் உபயோகிக்கவேண்டும். இம்மருந்து துர்குணம் கொடுப்பதில்லையாதலால் அதிகவேளைகள் உபயோகிக்கலாம்.

13. தன்வந்தரி ரஸம்:—ரசம், வத்ஸநாபி, அப்பிரகம், தங்கம், அயர், முத்து, யவக்ஷாரம், சத்திக்ஷாரம், சீனிக்காரம், ஸ்வர்ண மாக்ஷிகம், வெள்வங்கம், உலாந்தலிங்கம், தேசாவரம், இவைகளைச் சமயிடையாக எடுத்துக் கல்வத்திலிட்டுக் கொடுவேலி கஷாயத்தாலும், சிறு புள்ளடி ரசத்தாலும், எருக்கம்வேர்க் கஷாயத்தாலும், கரிப்பான் (இதை கரிசேலங்கண்ணி யென்றும் கையாந்தகரை யென்றும் சொல்வார்கள்.) பஞ்சகோல கஷாயத்தாலும் மூன்று நாள் அரைத்து உலர்த்தி காசிக்குப்பியில் அடைத்து வாய் மூடி வாலுகாயந்திரத்தில் 3ஜாமம் அதாவது 9-மணி காடாக்னியாக எரித்து ஆறவிட்டு எடுத்து முன்போல பிச்சுகளால் பாவனைசெய்து உலர்த்தி சீசாவில் வைத்துக்கொண்டு உளுந்தளவு தகுந்த அனு

பானத்துடன் கொடுக்கவும். குறிப்பு:-அப்பிரகம், தங்கம், அயம், முத்து, ஸ்வர்ணமாக்ஷிகம், வெள்வங்கம், ஆக இந்தசேரக்குகளையும் பஸ்மமாக எடுத்துக்கொள்ளவும். ரஸம், வத்ஸநாபி, லிங்கம், இந்த மூன்றையும் சுத்திசெய்து எடுத்துக்கொள்ளவும். ரசத்தையும் சீனிக்காரத்தையும் சேர்த்துக்கல்வத்தில் அரைத்துக்கொண்டு பிறகு லிங்கத்தையும் சேர்த்து அரைத்துப்பிறகு மற்றவைகளைச் சேர்த்துக்கொள்ளவும். தேசாவரத்தை வஸ்திரகாயம் செய்து சேர்க்கவும். முன்போல சீசாவில் அடைத்து வாலுகாயந்திரத்தில் எரித்து ஆறவிட்டு எடுக்கவும்.

14. நிம்பாதிசூர்ணம்:வேப்பம்பட்டை பலம்10, சுக்கு, திப்பிலி மிளகு, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல், இந்துப்பு, பிடாலவணம், சௌவர்சலவணம், யவக்ஷாரம், சத்திக்ஷாரம், வகைக்குப்பலம் 1, ஓமம் பலம் 5. இவைகளை யிடித்துவஸ்திரகாயம் செய்து ஜாடியில் பத்திரப்படுத்தவும். வேளைக்கு அரைத்தோலா தகுந்த அனுபானத்துடன் சாப்பிட எல்லாவிதக்காய்ச்சலும் நீங்கும். குறிப்பு:-வேப்பம்பட்டை பழையமரத்தின்பட்டையாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

15, ஸ்ரீ ஜயமங்கள ரஸம்:—ரசம், கந்தகம், வெங்காரம், தாமிரபஸ்மம், வெள்வங்கபஸ்மம், சுவர்ணமாக்ஷிகபஸ்மம், இந்துப்பு, மிளகு, இவை வகைக்குத்தோலா 1, சுவர்ண சிந்தூரம் தோலா 2, காந்த சிந்தூரம் தோலா 1, வெள்ளிபஸ்மம் தோலா 1, இவைகளைக்கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து ஊமத்தையிலைச்சாற்றாலும், பிறகு நொச்சித்தழைச் சாற்றாலும், பிறகு தசமூல கஷாயத்தாலும், பிறகு நிலவேம்புக்கஷாயத்தாலும்தனித்தனியாக மூன்றுபாவனைசெய்து பிறகு இரு குன்றுமணியளவு மாத்திரை உருட்டிக்காயவைத்துக்கொள்ளவும். காய்ச்சல், சன்னிவகைகள், க்ஷயக்காய்ச்சல், அஸ்திக்காங்கை முதலியவை தீரும், அளவு வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் ஒன்று அல்லது இரண்டு வேளை. அனுபானம்—கால்தோலா ஜீரகப்பொடியை தேனில்

குழைத்துச்சாப்பிடவும். குறிப்பு:—இவ்விடத்தில் ரசத்தை உலாந்துலிங்கத்திலிருந்து முறைப்படி எடுத்துக்கொள்ளவேண்டும். மேற்படி விவரம் நமது சித்தர் முறையில் காண்க. கந்தகத்தை சுத்திசெய்துகொள்ளவேண்டும். வெங்காரத்தை ஓர் ஓட்டில்வைத்து சிறு தீயிட்டு எரித்தால் இளகிக்கட்டும். அதை எடுத்துக்கொள்ளவும். இது வெங்காரத்தின் சுத்தி. முதலில் கந்தகத்தைக் கல்வத்திலிட்டு பொடி செய்துகொண்டு பிறகு ரசத்தைச் சேர்த்து அரைத்துப் பிறகு எல்லாச் சாமான்களேயும் கல்வத்திலிட்டு நன்ருகப் பொடிசெய்து பிறகு வரிசைப்படி சார்களேவிட்டு பாவனை செய்யவேண்டும். அதாவது சாமான்கள் முழுகும்படி ரசத்தைவிடவும். பிறகு வெய்யிலில் வைக்கவும். ரசம் முழுவதும் வற்றினபிறகு பொடிசெய்து மறுபடியும் ரசத்தைவிடவேண்டும். இதுதான் பாவனையெனச் சொல்லப்படும். இம்மருந்து க்ஷய வியாதியையொட்டின காய்ச்சலிலும் மிகுந்த நன்மை செய்யும். இம்மருந்து நம்முடைய "க்ஷய நோயும் அதன் சிகித்சையும்" என்ற நூலில் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

16 ஜ்வர பைரவ சூர்ணம்:—சுக்கு, மருக்கொன்றை, வேப்பம்பட்டை, சிறுகாஞ்சொரி, கடுக்காய்த்தோல், கோரைக்கிழங்கு, வசம்பு, தேவதாரு, கண்டங்கத்திரிவேர், கர்காடகசிருங்கி, தண்ணீர்விட்டான் கிழங்கு, பர்பாடகம், தேசாவரம், பேய்க்கொம்மட்டிவேர், கோஷ்டம், பூலாங்கிழங்கு, மருள்கிழங்கு, திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள், லோத்திரப்பட்டை, சிகப்புச் சந்தனம், கரும்புரசம் பட்டை, வெப்பாலையரிசி, அதிமதுரம், கொடுவேலிவேர், முருங்கைப்பட்டை, குருந்தொட்டிவேர், அதிவிடயம், கடுகுரோகிணி, நிலப்பனைக்கிழங்கு, பதிமுகம், ஓமம் ஓரிலை, மிளகு, சீந்திற்கொடி, பில்வவேர், விலாமிச்சவேர், பச்சிலை, கருவாப்பட்டை, நெல்லிவற்றல், மூவிலை, பேய்ப்புடல், கந்தகம் ரசம், அயச்சிந்தூரம், அப்பிரகச் சிந்தூரம், மனோசிலை, வகைக்குப் பலம் 1 நிலவேம்பு பலம் 24 சேர்த்து எல்லாவற்றையும் இடித்து வஸ்திரகாயம்செய்துகொண்டு அரைக்கால் தோலா அளவு தேனில் அல்லது தகுந்த

அனுபானத்தில் கொடுக்கவும். எல்லாவிதக் காய்ச்சலும் விலகும். குறிப்பு:—கந்தகம், ரசம், அயம், அப்பிரகம், மனோசிலை இந்த ஐந்து சரக்குகள் நீங்கலாக மற்றவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவும். பிறகு கல்வத்தில் சுத்திசெய்த கந்தகத்தைப்போட்டு பொடிசெய்து பிறகு சுத்திசெய்த ரசத்தைச்சேர்த்து நன்றாக ரசம் மடியும்வரை மர்தித்துப் பிறகு மற்ற மூன்று சரக்குகளில்சுத்திசெய்த மனோசிலை அல்லது மனோசிலை பஸ்மத்தைச்சேர்த்துநன்றாக அரைத்து மற்ற இரண்டு சிந்தூரங்களையும் சேர்த்து நன்றாகக் கலந்து போகும்படி அரைத்துமுன் வஸ்திரகாயம்செய்த பொடிகளுடன் நன்றாகக் கலந்துகொள்ளவும். தேனில் குழைத்து சாப்பிட்டுப் பிறகு இஞ்சிரசம் அல்லது கஷாயங்களை அனுபானமாகக்கொள்ளவும்.

17. சுவர்ணமாலினீ வஸந்தம்:—சுவர்ணச்சிந்தூரம், 1 பங்கு முத்து பஸ்மம் 2 பங்கு, உலாந்துலிங்கம், 3 பங்கு, மிளகு 4 பங்கு, பால்துத்தம் 8 பங்கு, இவைகளைக் கல்வத்திலிட்டு மொத்த இடையில் ஆறில் 1 பங்கு பசு வெண்ணையைச் சேர்த்து அரைத்துப் பிறகு தேவையானவளவு எலுமிச்சம்பழ ரசத்தை விட்டு அரைக்கவும். நெய்பசை மடிந்துபோகும் வரையில் அரைக்கவும். இரண்டு குன்றுமணியளவு மருந்தைத் தேனிலும் திப்பிலிப்பொடியிலும் கொள்ளகாய்ச்சல், காங்கை, க்ஷயம், முதலிய நோய்கள் விலகும். குறிப்பு:—கர்பரீ என்ற வடமொழிக்கு சரியான அர்த்தம் பலவிதமாகச் சொல்லப்படுகின்றது. ஆங்கிலத்தில் Zinc Sulphate எனக் கூறப்படுகின்றது. ஹிந்தியில் கபரியா என அழைக்கப்படுகின்றது. வடதேசங்களில் இந்த சாமான் இரண்டுவிதமாகக் காணப்படுகின்றது. ஒன்று பச்சைநிறமானது. மற்றொன்று வெண்மை நிறமானது. இதில் பச்சை நிறமானது அதிக விலையுள்ளதாகவும் மற்றொன்று சாதாரண விலையுள்ளதாகவும் இருக்கின்றது. வடமொழி வைத்யசிந்தாமணி நூலில் பால்துத்தத்திற்கு க்ஷீரதுத்தமென வடமொழிப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கபரியா

என்பதற்கு ரசகம் எனப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இருந்தபோதிலும் பால்துத்தம்தான் பல வைத்யர்களால் உபயோகிக்கப்படுகின்றது. 4 மணிநேரம் கைவிடாமல் அரைத்தால் நெய்ப்பசையற்று பொடியாக ஆகிவிடுகின்றது. அதை உலர்த்தி சீசாவில் வைத்துக்கொண்டு முன்சொன்ன அளவுப்படி பல அனுபானங்களில் உபயோகிக்கலாம். க்ஷயக் காய்ச்சல்களில் மிகுந்த நன்மை செய்யும்.

18. லகுமாலினீ வஸந்தம்:—பால்துத்தம் 2 பங்கு, மிளகு 1 பங்கு, இரண்டையும் கல்வத்திலிட்டு நன்ருகப்பொடிசெய்துபிறகு அரைப்பங்கு பசுவெண்ணெயைச்சேர்த்து அரைத்துப்பிறகு எலுமிச்சம்பழரசம்விட்டு நெய்ப்பசைமாறுமளவு அரைத்து உலர்த்திக் கொள்ளவும். அளவு முன்போல.

19. கந்தக கஜ்ஜலி:—ஓர் மண்வாணலியில் சுத்திசெய்த கந்தகத்தைத்தூள்செய்துபோட்டு அதில் கண்டங்கத்திரி, நொச்சியிலை புங்கையிலை, இவைகளின் சார் சமயிடையாகச்சேர்த்து அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து கந்தகம் உருகினவுடன் அதற்குச்சமயிடை சுத்திசெய்த ரசத்தைப்போட்டு இரண்டையும் ஒன்றுசேர்த்து உடனே கீழே இறக்கி இரும்புக் கரண்டியால் மர்த்திக்கப் பொடியாகும். அதில் குன்றுமணியிடை எடுத்து அதனுடன் ஜீரகம் இந்துப்பு வகைக்கு வீசம் தோலா சேர்த்துத்தேனில் சாப்பிட காய்ச்சல் முதலிய பல ரோகங்கள் தீரும். குறிப்பு:—மண் வாணலியில் இருக்கும் சார் மெதுவாக வற்றியபிறகு கந்தகம் உருக ஆரம்பிக்கும். எண்ணெபோல உருகும் சமயம் பார்த்து ரசத்தைப் போடவும் அந்த உருகின கந்தகமும் ரசமும் ஒரே செகண்டில் கலந்துவிடும். உடனே அடுப்பைவிட்டு இறக்கிக்கீழே வைத்துக் கொண்டு ஓர் இரும்புக்குழவி அல்லது குழவிபோன்ற வடிவமுள்ள ஓர் இரும்புசாமான் அல்லது இரும்புக் கரண்டியால் மர்த்திக்க கருநிறமான பொடியாகும். இதற்கு கந்தகஜ்ஜலீ யெனப்பெயர். சீக்கிரம் அடுப்பைவிட்டு இறக்காவிட்டால் கந்தகம் தீப்பற்றிவிடும்.

ஆகையால் உடனே இறக்கிவிடவும். அஜாக்கிரதையால் தீப்பற்றி விட்டாலும் கூட உடனே கீழே இறக்கி நெருப்பை வாயால் ஊதி அணைத்துவிட்டு முன்போல மர்த்திக்கவும். சிறு தீயாக எரித்து கந்தகம் சற்று உருகினவுடன் நெருப்பைத்தணித்து விட்டால பிறகு தீபிடிக்காது. இம்மருந்து சற்று வாடிக்கையுள்ளவர்களுக்குத்தான் சரியாக அமையும்.

20. ஸித்தப்ராணேசுவர ரசம்:—சுத்திசெய்த ரசம் தோலா 4, சுத்திசெய்த கந்தகம் தோலா 4, அப்பிரக சிந்தூரம் தோலா 4, சத்திக்ஷாரம், வெங்காரம், யவக்ஷாரம், பஞ்சலவணம், திரிபலை, திரிகடு, வெப்பாலையரிசி, ஜீரகம், கருஞ்ஜீரகம், கொடுவேலிவேர், ஓமம், வெள்ளைப்பெருங்காயம் (இதைப்பால் பெருங்காயம் என்பர்) வாய்விளங்கம், சதகுப்பை, வகைக்குத்தோலா 1, ஆகிய இவைகளை நன்றாகப்பொடிசெய்து கொள்ளவும். வீசம் தோலாயிடை (இதைப் பணவிடையெனத் தமிழில் சொல்லுவார்கள்) வெற்றிலையில் வைத்துத்தேனில் குழைத்து வெற்றிலையுடன் சாப்பிடவும். காய்ச்சல் தணியும். காய்ச்சலுடன் வரும் அதிசார நோய் விலகும். குறிப்பு:—சத்திக்ஷாரமென்பது சோடாவுப்பு. வெங்காரத்தைப் பொடிசெய்து ஓர்ஓட்டில்வைத்துச் சிறுதீயிட்டு எரித்தால் உருகிக் கட்டும். அவ்விதம் செய்வது வெங்காரத்திற்கு சுத்தி. பஞ்சலவணம் என்பது ஐந்துவகை உப்பு. அவையாவன—இந்துப்பு, பிடாலவணம், சௌவர்சலவணம், கரியுப்பு, சமுத்திரஉப்பு. இவற்றுள் கரி உப்பு என்பது கறுப்பு உப்பு. கொடுவேலி என்பது சித்திரைமூலம். ரசத்தையும் கந்தகத்தையும் முதலில் கல்வத்தில் போட்டு அரைத்துப் பொடிசெய்து தனியாக வைத்துக்கொள்ளவும். அப்பிரக சிந்தூரம், நீங்கலாக மற்ற சரக்குகளை வெய்யிலில் காயவைத்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும். பிறகு எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துக்கலந்து எடுத்துக்கொள்ளவும். டைபாயிட் முதலிய காய்ச்சல்களில் காணும் அதிசாரங்களுக்கு நல்லது.

21071

## ஜ்வரம்.

21. சிரோலேபம்:—சிகப்பு அலரி புஷ்பம், நெல்லிவற்றல், காடி, இவைகளை ஒன்றுசேர்த்து தலையில் பத்துபோட காய்ச்சல்களில் காணும் தலைவலி நீங்கும். குறிப்பு:—காய்ச்சல்களில் சில சமயங்களில் சகிக்கமுடியாத தலைவலி காணுவதுண்டு. அக்காலங்களில் இந்தப்பத்தை உச்சித்தலை நெற்றி முதலிய பாகங்களில் சுகோஷ்ணமாகப் போடவேண்டும். காடி என்பது புளித்தகாடி. கடலைப்புளிப்பை எடுத்துக்கொள்ளலாம். விநிகர் என்ற காடியையும் எடுத்துக்கொள்ளலாம். அதுவும் கிடைக்காத காலங்களில் புளித்த சோறு தண்ணீரை எடுத்துக்கொள்ளவும். சிகப்பு அலரி புஷ்பம், நெல்லிவற்றல் இரண்டையும் சமயிடையாக எடுத்துக்கல்வத்தில் போட்டு காடிவிட்டு அரைத்து ஓர் இரும்பு காண்டியில் அந்த விழுதைப்போட்டு அடுப்பில் கிளரி பொறுக்குமளவு சூட்டுடன் பத்து போடவேண்டும்.

22. சுவர்ணகடித மகரத்வஜம்—ஷட்குணபலிஜாரிதம்:—தங்கரேக்கு பலம் 1, சுத்திசெய்த ரசம் பலம் 8, சுத்திசெய்த கந்தகம் பலம் 16 இவைகளைக் கல்வத்திலிட்டு அரைத்துப் பிறகு கற்றாழைச்சார்விட்டு அரைத்துக் காயவைத்துப் பொடிசெய்து ஓர் காசிக்குப்பியில் போட்டு காசிக்குப்பிக்கு ஏழு சீலைமண் வலுவாகச் செய்து வெய்யிலில் காயவைத்து பிறகு வாலுகாயந்திரத்தில் மூன்றுநாள் இடைவிடாமல் முத்தீயிட்டு எரித்து ஆறவைத்து எடுத்து குப்பியை உடைத்து உள்ளிருக்கும் சிந்தூரத்தை எடுத்து நன்றாகப்பொடிசெய்து சீசாவில் பத்திரப்படுத்தவும். குன்றுமணி யிடை வெற்றிலையில்வைத்துத் தேன்விட்டுக்குழைத்து வெற்றிலையுடன் சாப்பிடவும். காய்ச்சல் முதலிய ரோகங்கள் போகும். இந்த மருந்திற்கு சுவர்ணகடிதமகரத்வஜமெனப்பெயர். இவ்விதம் தயாரான மருந்தில் மறுபடியும் ரச அளவுக்கு இருபங்கு சுத்த கந்தகத்தைச் சேர்த்து முன்போல குமரிச்சாற்றால் அரைத்து வெய்யிலில் உலர்த்தி முன்போல மூன்றுநாள் எரித்து எடுத்து மறுபடியும் அவ்விதமே செய்ய அதற்கு ஷட்குணபலிஜாரித மகரத்வஜமெனப்

பெயர். இது மிகவும் வீர்யமுள்ளது. குறிப்பு:—முதலில் ரசத்தையும் கந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாகப் பொடிசெய்து பிறகு தங்கரேக்கைச்சேர்த்து குமரிரசம் (சோற்றுக்கற்றாழைச் சார்) விட்டு அரைக்கவும். தங்கரேக்கு என்பது gold leaves என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும். அல்லது சுருள்தங்கம் எடுத்துக்கொள்ளலாம். வெய்யிலில் உலர்த்திப் பொடிசெய்து காசிக்குப்பியில் அடைக்கவேண்டும். காசிக்குப்பி கிடைக்காவிட்டால் மெல்லிய அதாவது அதிக கனமில்லாத இலேசான வெள்ளை சீசா உபயோகிக்கலாம், சீசாவின் வாய்க்குப்பொருந்தும்படி ஓர் மாக்கல்லை அளவாகத் தயார்செய்துகொள்ளவும். பிறகு வாய்க்கு மாக்கல்லைப் பொருத்தவும். அவ்விதம் பொருத்த பசைவேண்டும். உளுந்துமாவில் ஜலத்தைவிட்டுப்பிசைந்து அந்தப்பசையைத்தடவி மாக்கல்லைப் பொருத்தவும். பிறகு செம்மண் சீலையால் முதலில் வாய்க்குச்சீலைமண் செய்து பிறகு சீசா முழுவதற்கும் சீலைமண் 7 தடவை செய்யவும். நன்றாக வெய்யிலில் காயவைக்கவும். ஓர்பானையில் அடியில் 5, 6 அங்குலம் மணல் கொட்டி அதில் சீசாவை நிறுத்தி பானைவாயளவு மணல் கொட்டவும். இதற்கு வாலுகாயந்திரமெனப்பெயர். பானைவாய்க்கு அகல்மூடி சாதாரணமாகச்சீலைமண் செய்து அடுப்பேற்றி முதல்நாள் தீபம்போலவும் (இதற்குதீபாக்கினியென்பர்) மறுநாள் சற்று அதிகத்தீயும் அதற்குமறுநாள் அதிகத்தீயும் (இதற்கு காடாக்னியெனப்பயர்) ஆக மூன்றுநாள் எரிக்கவும். இதில் ஜாக்கிரதையாக கவனிக்கவேண்டியது என்னவென்றால் சீசாவுக்குசீலைமண் வலுவாக இருக்கவேண்டுமென்பதே. இம்மருந்தைத் தயார்செய்யும்பொழுது நமக்கு நேர்ந்த ஓர் அனுபவத்தை இங்கு விவரிப்பது பலருக்கு உபயோகமாகவிருக்குமென அதை குறிப்பிடுகிறோம். அதாவது சீலைமண் செய்யும்பொழுது சரியாக கவனம் செலுத்தாமல் சீலைமண் செய்து வாலுகாயந்திரத்தில் எரிக்கும்பொழுது இரண்டாவது நாள் எதிர்பாராத விதமாக உள்ளிருக்கும் சீசா வெடித்து அதிலிருந்து உருகின கந்தகம் பானைக்கு வந்து பானையையும் அடிபாகத்தில் பிளந்துகொண்டு வெளியில் சுமார்

மூன்று அடி தூரம் தண்ணீராகப் பீச்சிக்கொண்டுவந்தது. உறுதியான சீசாவில் சீலமண்ணும் சரியாகச்செய்வதுடன் சீசாவில் பாதியளவுக்கு மேல்மருந்தைப் போடவும் கூடாது. ஏனெனில் கந்தகம் உருகிப்பொங்குவது சுபாவமானதால் அதற்குக் கூடியவளவு இடம் வேண்டியதாகின்றது. கந்தகம் முதலில் உருகும் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக எரிந்துபோய் கடைசியாக ரசமும் தங்கமும் மிஞ்சுகின்றது. ஆறின பிறகு சீசாவை எடுத்து மேலிருக்கும் சீலமண்ணை விலக்கி உள்ளிருக்கும் சிந்தூரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். சீசா வாய் குறுகியிருப்பதால் உள்ளிருக்கும் கெட்டியான சிந்தூரத்தை எப்படி எடுப்பதென்ற கேள்வி தோன்றும். இதற்குப்பலர் பலவிதமாக யுக்திகள் செய்வார்கள். நம்முடைய முறையாவது—சீசாவுக்குச் சீலமண்செய்வதற்கு முந்தியே அந்த சீசாவை இரண்டு பாகமாகச்செய்துவிட வேண்டும். அதற்கு வழி—ஓர் மெல்லிய நூலை சீமை எண்ணை (இதை மண் எண்ணையென்பர்)யில் தோய்த்து அந்த நூலை இரண்டு விரல்களால் உருவினால் அதிகப்படி எண்ணை நீங்கிவிடும். பிறகு கையைத் துடைத்துக்கொண்டு அந்த நூலை சீசாவின் நடுவில் குறுக்காகக் கட்டவும். பிறகு அந்த நூலில் தீயிட்டால் நூல் பற்றி எரியும். அணைந்தவுடன் எரிந்த ரேகையில் சற்று நீரைத்தெளித்தால் சீசா ஒழுங்காகப் பிளந்துபோகும். பிறகு அதில் முன்சொன்னபடி மருந்தை அடைத்து சீலமண் செய்யவும். இவ்விதம் சீசாவை முதலிலேயே பிளந்துவைத்துவிட்டால் சீசாவின் உடைந்த அணுக்கள் மருந்தில் கலக்காது. சிலர் மூன்றுநாள் எரித்த பிறகு சீசாவையெடுத்து சீலமண்ணை விலக்கிப்பிறகு நாம் சொன்னவிதமாகச் செய்வார்கள். எவ்விதம் செய்தாலும் சீசாவின் உடைந்த அணுக்கள் மருந்தில் கலக்காமல் கவனித்துக்கொள்ளவேண்டியது முக்கியம். சீசாவின் வாய் பாகத்தில் கெட்டியாக உரைந்த மருந்தும் சீசாவின் அடிபாகத்தில் மேற்சொன்னவிதமாக சில அம்சமும் இருக்கும். அவைவற்றையும் கத்தியால் சுரண்டி எடுத்துக்கொள்ளவும். இதற்கு சுவர்ணகடித மகரத்வஜமெனப்பெயர். இதில் தங்கத்தைத் தனியாகப் பிரித்துவிடலாமென்பது சிலர் எண்ணம். சாஸ்திரங்களில் ஸ்வர்ணம் சேர்ந்துதான் மகரத்வஜமாகிறது என்

பது வியக்தம். தங்கரேக்கைச்சேர்த்தால் அது மருந்துடன் கலந்து போகிறதென்பதும் அதைப்பிறகு பிரித்து எடுக்கமுடியாதென் பதும் பலர் அறிந்த விஷயமே. ஆனால் தங்கத்தை ரேக்காகச் செய்யாமல் ஒரே கட்டியாகப்போட்டால் அது மருந்துடன் கலக் காது. ரசமும் கந்தகமும் சேர்ந்தால் எந்த லோகமும் பஸ்மம் ஆகியே தீரவேண்டும். இதில் தங்கத்திற்கு எட்டுப்பங்கு ரசமும் 16 பங்கு கந்தகமும் சேர்ந்திருக்கும்பொழுது தங்கத்தைப்பிரித்து விடுவதென்பது கனவே. இது பூர்ணசந்திரோதயமெனச்சில நூல் களில் அழைக்கப்படுகின்றது. இவ்விதம் மூன்று நாள் எரித்து எடுத்த மருந்தை மறுபடியும் கல்வத்திலிட்டு முன்னளவு கந்தகம் மாத்திரம் சேர்த்து குமரிச்சார்விட்டு அரைத்து உலர்த்தி முன் போல மூன்று நாள் எரித்து எடுத்து மறுபடியும் முன்னளவு கந்த கம் சேர்த்து குமரிச்சார்விட்டு அரைத்து மூன்று நாள் முன்போல எரித்து எடுத்தால் அதற்கு ஷட்குணபலிஜாரித மகரத்வஜமெனப் பெயர். இது மகரத்துவஜத்தைக்காட்டிலும் அதிக வீர்யமுள்ளது. தகுந்த அனுபானங்களில் கொடுத்தால் எல்லா நோய்களுக்கும் நல்லது.

23. **சரபுங்கா யோகம்:**—முட்காய்வேளை வேரைக்கால்தோலா எடுத்து தண்ணீரை விட்டு சந்தனம்போல அரைத்து 2 அவுன்சு பசும்மோரில் கலக்கிச் சாப்பிடவும். காய்ச்சல் கட்டிகள் நீங்கும். குறிப்பு:—மலேரியா காய்ச்சல் முதலியவைகளிலும் காய்ச்சல் இல் லாமலும் பெரியோர்களுக்கும் வயிற்றில் ஓர்விதக்கட்டிகள் காணுவ துண்டு. அவை இருவிதமாகும். வயிற்றில் வலதுபக்கத்திலிருந் தால் அந்தக்கட்டிக்கு யகிருத்தென்று பெயர். இதை ஆங்கிலத் தில் Enlargement of the liver என்பார்கள். வயிற்றில் இடது பக்கம் காணும் கட்டிகளுக்கு ப்லீஹா எனப்பெயர். இதை ஆங்கி லத்தில் Enlargement of the spleen என்பர். இந்த இருவகை களுக்கும் சுதேச முறைப்படி மருந்து ஏறக்குறைய ஒரேவிதம். ஆகையால் இம்மருந்தும் இனி வரும் மருந்துகளும் இருவகைக் கட்டிகளுக்கும் ஏற்றதே. முட்காய்வேளை என்பது ஓர் செடி. சுலபமாக எங்கும் கிடைக்கும்.

24. அர்க லவணம்:—எருக்கம் பழுப்பையும் இந்துப்பையும் சமயிடையாக எடுத்து ஓர் புதிய மண்சட்டியில் போட்டு அடுப்பேற்றித் தீயிட்டு எரித்து சட்டிக்குள் புகை கண்டவுடன் இறக்கி ஆறவிட்டுப் பொடிசெய்து மஸ்து இரண்டு அவுன்சில் கால்தோலா மருந்தைப்போட்டுக் கலக்கிச்சாப்பிடவும். முன்சொன்ன நோய்கள் தீரும். குறிப்பு:-இந்துப்பைப்பொடிசெய்துகொள்ளவும். சட்டியில் கொஞ்சம் இந்துப்புப் பொடியைப்போட்டு அதின்மேல் ஓர் எருக்கம் பழுப்பைப் பரப்பி அதன்மேல் கொஞ்சம் இந்துப்புப் பொடியும் அதன்மேல் எருக்கம் பழுப்பும் இவ்விதம் ஒன்றின்மேலொன்ருகப்பரப்பி சிறு தீயாக எரித்தால் அந்தச்சூடு உள்ளிருக்கும் எருக்கம் பழுப்பிலும் உப்பிலும் தாக்கி நீர் சுண்டின பிறகு எருக்கம் பழுப்பு உலர்ந்து தீப்பற்றி நன்ருகப் புகைகிளம்பும். அந்தப்பதத்தில் எடுத்துவிடவும். அதிகநேரம் வைத்திருந்தால் சாம்பல் ஆகிவிடும். மருந்து குணமிராது. எருக்கம் பழுப்பு கருகிப்போன பதத்தில் எடுக்கவேண்டும். மஸ்து என்பது வடமொழி. அது தயார்செய்யும் விதமாவது—ஓர் மெல்லிய வஸ்திரத்தில் தயிரைக்கொட்டி முடிந்துவிட்டால் அதிலிருந்து தண்ணீர் வரும். அதற்கு மஸ்து எனப்பெயர். ஆங்கிலத்தில் தயார் செய்யும் whey என்பதும் இந்த மஸ்துவும் ஒரே குணமுள்ளதாகநினைக்கப்படுகின்றது ஆனல் whey என்பது நமது வைத்ய ரீதியாகக் கவனித்தால் சாஸ்திர விருத்தம். பாலில் எலுமிச்சம்பழம் சேர்த்து அதை முறிப்பதை நாம் விஷகுணமுள்ளதாக நினைக்கிறேம். ஆனல்மஸ்துவில் எவ்வித தோஷமும் இல்லையென்பது வியக்தம்.

25 அபயாலவணம்:—வேப்பம்பட்டை, புரசம்பட்டை, எருக்கு சமூலம், சதுரக்கள்ளிவேர், நாயுருவி சமூலம், கொடுவேலி சமூலம், மாவிலிங்கப்பட்டை, முன்னைவேர், வெள்ளைச்சாரணை சமூலம், சிறு நெருஞ்சி சமூலம், கண்டங்கத்திரி சமூலம், முள்ளி சமூலம், புங்கம்பட்டை, விஷ்ணுகிராந்தி, வெப்பாலைப்பட்டை, சிகப்புச்சாரணத்தி சமூலம், தும்மட்டி சமூலம் இவைகளைச்சமயிடை யெடுத்து நொறுக்கி வெய்யிலில் காயவைத்து எள் சக்கைத் தீயால் எரித்துச் சாம்பலாக்கி அந்தச்சாம்பல் 64 தோலாஎடுத்து ஓர் புதிய மண்பானையில் போட்டு சின்னப்படியில் 16 படி ஜலம்விட்டு

அடுப்பேற்றி நாலில் ஒன்ருக வற்றவைத்து வடிகட்டி அந்தக்கஷா யத்தை ஓர் மண்சட்டியில் வைத்து அடுப்பேற்றி 64 தோலாயிடை யுள்ள இந்துப்பைப் பொடிசெய்து அதில் போட்டு 32 தோலா யிடையுள்ள கடுக்காய்ப்பொடி, பசு மூத்திரம், சுத்தஜலம், இவை களைத்தனித்தனி 32 தோலா சேர்த்து சிறு தீயிட்டு எரித்து குமிழிகளும் புகையும் வரும் சமயம் பார்த்து அந்தப்பதத்தில் அடுப்பைவிட்டு இறக்கி அதில் ஜீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளைப் பெருங்காயம், ஓமம், கோஷ்டம், பூலாங்கிழங்கு, வகைக் குத்தோலா இரண்டு பொடிசெய்து போட்டு ஒன்ருகக்கலந்து வெய் யிலில் வைத்து உலர்ந்த பிறகு பொடிசெய்து பத்திரப்படுத்தவும். வேளைக்கு அரைத்தோலா பொடியைத்தகுந்த அனுபானத்தில் கொடுக்க முன்சொன்ன கட்டிகள் நிவர்த்தியாவதுடன் வயிற்றி லுண்டாகும பல ரோய்கள் விலகும். குறிப்பு:—வேப்பம்பட்டை முதலிய 17 சாமான்களைத் தனித்தனியாக வெப்யிலில் காயவைத்து நன்ருக உலர்ந்த பிறகு எல்லாவற்றையும் சமயிடையாக நிறுத்துக் கொள்ளவேண்டும். பிறகு நன்ருக இடிக்கவேண்டும். இடிக்கும் பொழுது எல்லாவற்றையும் சௌகரியம்போல ஒன்ருக சேர்த்துக் கொள்ளலாம். பிறகு அந்த சரக்குகளை மண் கலங்காதபடி ஓர் கெட்டித்தரையில் ஒன்ருகக்குவித்து தீயிடவேண்டும். தீப்பிடிக் கும்படி எள்ளுச்செடியை உபயோகிக்கவும். எள்ளுச்செடி சாம் பல் அதில் கலந்தால் பாதகமில்லை. அந்த சாமான் முழுவதும் தீபிடித்து நன்ருகக்கருகிப்போக வேண்டும். வெள்ளைச்சாம்பலாக ஆகவேண்டுமென்ற கட்டாயமில்லை. கறுப்புச்சாம்பலாக இருந்தால் போதுமானது. அந்தச்சாம்பலைக் கணக்குப்படி நிறுத்து எடுத் துக்கொள்ளவும். முன்னி என்பது கண்டங்கத்திரி யினத்தைச் சார்ந்தது. அது கிடைக்காவிட்டால் கண்டங்கத்திரியை அதற் குப்பதிலாக எடுத்துக்கொள்ளவும். தும்மட்டி என்பது ஓர்கொடி. அதன் காயை வற்றல்செய்து விற்பனைக்கு வருவதுண்டு. தும் மட்டிக்காய் வற்றல் என அதற்குப்பெயர். வெடியுப்பு காய்ச்சும் காலங்களில் பதத்தில் கொதி வருவதுபோல இறக்கும் பதத்தில் கொதிவரும். அப்பொழுது குமிழிகளும் புகையும் உண்டாகும். அதுதான் சரியான பதம். மருந்தைக் காற்று அடிக்காத இடத் தில் பத்திரப்படுத்தவும். மருந்தில் குளிர்ந்த காற்று மருந்து ஜாடி யில் பட்டால் ஈரக்கசிவு உண்டாகும்.

## கிருதயோகங்கள்.

185. திக்தகம்:—பேய்ப்புடல், வேப்பம்பட்டை, கடுகுரோகிணி, மரமஞ்சள், மலைதாங்கிவேர், சிருகாஞ்சொரிவேர், பர்பாடகம், மருக்கொன்னை, வகைக்குத்தோலா 4, எடுத்து இடித்து ஓர் பானையில்போட்டு ஜலம் பக்காப்படியில் 4 படி ஜலம் விட்டு அடுப்பேற்றி எட்டில் ஒன்ருக வற்றவைத்து வடிகட்டி அந்தக்கஷாயத்தை ஓர் இரும்புச்சட்டியில் விட்டு அதில் மருக்கொன்னை,கோரைக்கிழங்கு, நிலவேம்பு, வெப்பாலையரிசி, திப்பிலி, வெள்ளைச்சந்தனம் இவைகளை வகைக்குத்தோலா எடுத்துப் பொடிசெய்துபோட்டுக் கலக்கி பசு நெய் பலம் 12 விட்டு கிருதபதமாகக்காய்ச்சி வடிகட்டி ஜாடியில் பத்திரப்படுத்திக்கொள்ளவும். குஷ்டம், அக்கி, சொரி, சிரங்கு, அரிப்பு, முதலியவை தீரும். குறிப்பு:—ஆங்கிலத்தில் மருந்து சரக்குகளை அல்கோஹாலில் ஊரவைத்து வடிகட்டி பத்திரப்படுத்திக்கொள்வது வாடிக்கை. ஆனல் ஆயுர்வேதத்தில் மருநதுசரக்குகளை நெய் முதலியவைகளில் போட்டு அவைகளின் சத்து நெய் முதலியவைகளில் இறங்கும்படி செய்து குறிப்பிட்ட நோய்களுக்கு உபயோகிப்பது ஓர் முறை. மலைதாங்கிக்கு பங்கம்பாளையென்று மற்ருெரு பெயர். த்ராயமாணு என்ற வடமொழிப் பெயருக்கு மருக்கொன்றை என்பதுதான் பொருள். ஆனல் ஸஹஸ்ரயோகம் வியாக்யானங்களில் பிரம்மி என்று பொருள் சொல்லப்பட்டிருக்கின்றது. அது தவறு. இந்த நெய்க்கு திக்தகமென்று ஸஹஸ்ரயோகம் முதலியவைகளில் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனல் இதற்கு திக்தஷட்பலகம் என்பதுதான் சரியான பெயர். மற்ற பல நூல்களில் திக்தஷட்பலகம் என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. குஷ்ட நோயில் கிருதங்களை 6 பலம் அதாவது 24 தோலாயிடை ஒரு நாளில் உபயோகிக்கலாமென்பது சாஸ்திரக்கொள்கையெனக் கூறுகின்றனர். கிருதங்களை காலை ஒரு வேளைமாத்திரம்தான் உபயோகிப்பது வழக்கம். லேகியம் முதலியவைகளைப்போல தினம் இருவேளை உபயோகிக்கக் கூடாது. பொதுவாக கிருதத்தின் அளவு அரை அவுன்சுமுதல் 1 அவுன்சுவரை. அளவுப்படி கிருதத்தை ஓர் வெள்ளிப்பாத்திரத்

தில் எடுத்து அப்பாத்திரத்தை சுடுதண்ணீரில் வைத்தால் நெய் உருகும். உருகினபிறகு அந்த நெய்யை அப்படியே சாப்பிட்டு கொஞ்சம் சுடுதண்ணீரை அனுபானமாகச் சாப்பிடவேண்டும். குழந்தைகளுக்குக் குறைந்த அளவில் கிருதத்தை உபயோகிக்க லாம். இந்த கிருதத்தில் மலைதாங்கி வேருக்குப்பதிலாக திரிபலை சில புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மலைதாங்கி வேர் பல நூல்களில் காணப்படுவதால் அதைச்சேர்ப்பதுதான் சாஸ்திர சம்மதமாகும். இந்த கிருதத்தில் 12 பலம் அளவுசொல்லி யிருப்பதால் அந்த அளவுதான் காய்ச்சவேண்டும். அதிக அளவில் காய்ச்சினால் மருந்தின் குணம் குறையும்

186 **மஹாதிக்தகம்:**—ஏழிலைம்பாலைப்பட்டை, பர்பாடகர், சரக்கொன்றை, கடுகுரோகிணி, வசம்பு, திரிபலை, பதிமுகம், மலை தாங்கிவேர், மஞ்சள், மரமஞ்சள், நன்னாரிவேர், மாகாளிவேர், அரிசித்திப்பிலி, யானைத்திப்பிலி, வேப்பம்பட்டை, வெள்ளைச்சந்த னம், அதிமதூரம், பேய்க்கும்மட்டிவேர், வெப்பாலையரிசி, சீந்திற் கொடி, நிலவேம்பு, விலாமிச்சவேர், ஆடாதோடை, மருள்கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, பேய்ப்புடல், அதிவிடயம், கோரைக் கிழங்கு, மருக்கொன்றை, சிருகாஞ்சொரிவேர், இவைகளை வகைக் குத்தோலா எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து அந்தப்பொடி யை ஓர் இரும்புசசட்டியில் போட்டு பசுநெய் பக்காப்படி ஒன்று விட்டு 8 பக்காப்படி சுத்தஜலமும் இரண்டு பக்காப்படி நெல்லிக் காய்ச்சாறும் அதில் சேர்த்து அடுப்பேற்றி கிருதபதமாகக்காய்ச்சி வடிகட்டி ஜாடியில் பத்திரப்படுத்தவும். குஷ்டம், பித்தம், முத லிய பலநோய்கள் தீரும். குறிப்பு:—கிருதங்களைக்காய்ச்சும்பொழுது சிறுதீயிட்டு எரிக்கவும். ஒரேஜாதி விறகாகவிருப்பது நலம். கிரு தங்களை ஒரேநாளில் காய்ச்சி எடுத்தால் குணம் இராது. மூன்று நாளாவது ஊறவைத்துக்காய்ச்சவும். அளவு முன்போல்.

187. **குக்கலு திக்தகம்:**—வேப்பம்பட்டை, சீந்திற்கொடி, ஆடாதோடைவேர், பேய்ப்புடல், கண்டங்கத்திரிவேர் வகைக்குப்

## கிருதயோகங்கள்.

பலம் 10 எடுத்து (40 தோலா) இடித்து ஓர் பானையில் போட்டு பக்காப்படியில் 8 படி (பெரியபடி, பக்காப்படி, பட்டணம்படி என்பன எல்லாம் ஒன்றே) ஜலம்விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்ருகவற்ற வைத்து வடிகட்டி அந்தக்கஷாயத்தை ஓர் இரும்புச்சட்டி (இரும்பு வாணுய்)யில் போட்டு பசுநெய் பக்காபடியில் அரைப்படி விட்டு அதில் மலைதாங்கிவேர், வாய்விளங்கம், தேவதாரு, யானைத்திப்பிலி, யவக்ஷாரம், சத்திக்ஷாரம், சுக்கு, மஞ்சள், சதகுப்பை, செவ்வியம், கோஷ்டம், வாலுளுவையரிசி, மிளகு, வெப்பாலையரிசி, ஓமம். கொடுவேலிவேர், கடுகுரோகிணி, சேங்கொட்டை, வசம்பு, தேசாவரம், மஞ்சிஷ்டி, அதிவிடயம், கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றல், ஜீரகம், வகைக்குத் தோலா 1, குக்கில்பலம் 5 இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து போட்டு நன்ருகக் கலக்கி கிருதபதத்தில் காய்ச்சி வடிகட்டி ஜாடியில் பத்திரப்படுத்திக்கொள்ளவும். எல்லா வாத வியாதிகளுக்கும் குஷ்ட நோய்க்கும் நல்லது. குறிப்பு:—இம்மருந்து அஷ்டாங்க ஹிருதயத்திலும் அகத்தியர் நூலிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. அனுபவத்தில் இது மிகவும் உயர்ந்த மருந்து. வாதநோய் அனைவற்றிலும் நல்ல குணம் கொடுக்கின்றது. குஷ்ட நோயில் ஓர் வகை குஷ்டநோய் (அதாவது உடம்பிலும் கைகால்களிலும் புண்களுடன் கூடின குஷ்டநோய்)க்கு இது மிகவும் உயர்ந்த மருந்து. புண்களை ஆற்றிவிடுகின்றது. பொதுவில் கிருதங்களில் 1 படி கிருதம் காய்ச்சினுல் நாலில் ஒரு பங்கு சரக்குதான் கல்கமாகப்போட்டுக் காய்ச்சுவது வழக்கம். இதில் கல்கவஸ்துக்களின் அளவு அதிகமாய் இருக்கின்றது. இருந்தாலும் அந்த அளவுப்படியேதான் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்தத் தென்தேசத்தில் குக்கில் நல்ல சாமானுகக்கிடைப்பது கடினமாகவிருக்கின்றது. அதைப்பார்த்துவாங்கி கல் வகையறு இல்லாமல் எடுத்து திரிபலை கஷாயத்தில் கொதிக்க வைத்துப்பிறகு வெய்யிலில் காயவைத்துக்கொண்டால் சுத்தியாகும், குக்கிலை மாத்திரம் தனியாக எடுத்து கல்வத்திலிட்டு அரைத்து நெய்யில் கலக்கவும். மற்ற நெய்களுக்கு வரும் பதம்

மாதிரி இதில் வரமாட்டாது. கல்கசாமானைக்கையில் தேய்த்தால் ஒட்டாமல் திரிபோல் இருப்பதுதான் கிருதத்தின் பதமாகும். இந்த நெய்யின் கஷாய சாமான்களை மாத்திரம் தனியாகக்கஷாய முறைப்படி தயாரித்தால் அது பஞ்சதிக்தகஷாயமெனச் சொல்லப் படும். அந்தக்கஷாயத்தை குஷ்டம், பித்தாதிகமான நோய்கள் சொரி, சிரங்கு. தலைக்கிருகிருப்பு, முதலியவைகளில் கொடுக்க லாம். பலம் முதலியவைகளின் அளவை ஔஷதசாரம் 16-வது பக்கம் பார்க்கவும்.

188. இந்து காந்தகிருதம்:—ஆவிப்பட்டை. தேவதாரு, தச மூலம், இவைகளின் கஷாயத்தில் பசும்பாலும் நெய்யும் சேர்த்து திப்பிலி, தேசாவரம், கொடுவேலிவேர், செவ்வியம், சுக்கு, இந் துப்பு, இவைகளைக்கல்கமாகச்சேர்த்து கிருதபதத்தில் காய்ச்சி வடிகட்டி ஜாடியில் பத்திரப்படுத்தவும். வாதநோய், க்ஷயம், மகோதரம், குன்மம், சூலை, விஷமஜ்வரம் ஆகிய இவை நீங்கும். குறிப்பு:—கஷாயசாமான் 12 யும் வகைக்குப் பலம் 1 எடுத்து இடித்து சின்னப்படியில் 6 படி ஜலம்விட்டு நாலில் ஒன்றாக வற்ற வைத்து வடிகட்டி அந்தக்கஷாயத்தை இரும்புச்சட்டியில்விட்டு பசும்பால், நெய், இவைகளை தனித்தனிகஷாயத்தின் அளவுவிட்டு கல்கசாமான் 6-ம் வகைக்குப்பலம் அதாவது தோலா 4 எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து அதில்போட்டுக்கலக்கி பதமாகக் காய்ச்சி எடுக்கவும். கிருதம் காய்ச்சுவதில் பல சாஸ்திரவிதிகள் இருந்தாலும் நாம் கீழ்ச்சொன்ன முறையே பெரும்பாலும்வட தேசங்களில் பின்பற்றப்படுகின்றது.

189. ஸுகுமாரகிருதம்:—வெள்ளைச்சாரணத்திவேர் 100 பலம், தசமூலம், க்ஷீரகாகோலி, அமுக்கராக்கிழங்கு, ஆமணக்கு வேர், தண்ணீர்விட்டான்கிழங்கு, திருணபஞ்சமூலம், வேல்வேர், இவை வகைக்குப்பலம் 10, எடுத்து இடித்து ஓர் பானையில்போட்டு சுத்தஜலம் சின்னப்படியில் 64 விட்டு எட்டில் ஒன்றாகக்காய்ச்சி வடிகட்டி ஓர் இரும்புச்சட்டியில்விட்டு அதில் விளக்கெண்ணை

சின்னப்படி 1, பசுநெய் சின்னப்படி 2, பசுவின்பால் சின்னப்படி 2 விட்டு அதில் திப்பிலி, தேசாவரம், இந்துப்பு, அதிமதுரம், திராக்ஷை, ஜீரகம், சுக்கு, இவைகள் வகைக்கு இரண்டுபலம் அதாவது 8 தோலா இடித்து வஸ்திரகாயம்செய்து கலக்கி அடுப்பேற்றி கிருதபதமாகக்காய்ச்சி வடிகட்டி ஜாடியில்வைத்து ஜீனி 30 பலம் சேர்த்து நன்ருகக்கலக்கி பத்திரப்படுத்தவும். இது அண்டநோய்கள், விப்புருதிக்கட்டி, குன்மம், மூலம், ருதுசூலம், முதலிய நோய்களில் நன்மைசெய்யும். குறிப்பு:—இதில் கஷாயச்சரக்குகளைமாத்திரம் கஷாயமுறையில் தயாரித்து வ்யாதிகளில் உபயோகிக்கின்றனர். அதற்கு ஸுகுமாரகஷாயம் எனப்பெயர் சொல்லப்படுகின்றது.

190. இக்ஷுராதி:—கரும்பு, அருகம்பில், சீந்திற்கொடி, நெல்லிக்காய், சிறுநெரிஞ்சி, ஆரை, இவைகளின் ரசம், இளநீர், பசும்பால் வகைக்குப்படி 1, கருவாப்பட்டை, பச்சிலை, எலம், சிருநாகப்பூ, பால்மரங்களின் மொக்குகள், வெட்டிவேர், கோரைக்கிழங்கு, நன்னாரிவேர், விலாமிச்சவேர், அதிமதுரம், ஜீனி, சந்தனம், கோஷ்டம், வகைக்குத்தோலா 1 இடித்து வஸ்திரகாயம் செய்த பொடி இவைகளைக்கொண்டு தயாரித்த நெய் ரக்தபித்தம் என்ற நோயைப்போக்கும். குறிப்பு:—சார்வரக்கூடிய வஸ்துக்களை யிடித்து ரசம் எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் கஷாயமுறையில் கஷாயம்செய்து அதை எடுத்துக்கொள்ளவேண்டும். உதாஹரணமாக நெல்லிக்காய் பச்சையாகக் கிடைக்காவிட்டால் அதற்குப் பதிலாக வற்றலை கஷாயம்செய்து எடுத்துக்கொள்ளவேண்டும். சிறுநெருஞ்சில்வேரை (பச்சையாக இருந்தாலும்) கஷாயம்செய்து கொள்ளவேண்டும், ஏனெனில் வ்யாதி வேரில் ரசம் கிடைக்காது. இவ்விதமே மேல்வரும் இடங்களிலும் செய்துகொள்ளவேண்டும். பால்மரங்களாவன—ஆல், அத்தி, இச்சி, அரசு, முதலியவை. இவற்றுள் கிடைத்தவரையில் மொக்குகளை எடுத்துக்கொள்ளவும். இவைகளை சற்று ஜலம்விட்டரைத்து நெய்யில் சேர்க்கவும். மற்றவைகளை வஸ்திரகாயம் செய்யவும். ஜீனியை அப்படியே சேர்க்க

வேண்டும். நெய்பதத்தில் காய்ச்சி வடிகட்டி ஜாடியில் பத்திரப் படுத்திக்கொள்ளவும். அளவு முன்போல.

191. தாத்ரியாதி:--நெல்லிக்காய்ச்சார், மொதக்கன்கிழங்குச் சார், கரும்புச்சார், தண்ணீர்விட்டான்கிழங்குச்சார். சாம்பல்பூஷணிக்காய்ச்சார், பசும்பால், பசுநெய், வகைக்குச்சின்னப்படி 1, இவைகளை ஓர் இரும்புச்சட்டியில் போட்டு அதில் திராக்ஷை; அதிமதுரம், சிகப்புச்சந்தனம், இவைகளைப் பொடிசெய்து போட்டு நெய்பதமாகக்காய்ச்சி வடிகட்டி ஜாடியில் வைத்துக்கொண்டு ஜீனி கலந்து உபயோகிக்க பெரும்பாடு, பித்தபாண்டு, பித்தகுன்மம், எலும்புருக்கி (rickets) மலட்டுத்தன்மை. முதலியவை நீங்கும்.

192. வாராஹிகிருதம்:—வாராஹி என்ற கிழங்கின் ரசம் பசுநெய் வகைக்குச் சின்னப்படி 1, இவைகளை இரும்புச்சட்டியில் போட்டு அதில் திராக்ஷை, உளுந்து, அமுக்கரா. வாழைப்பழம், ஜீனி, கூகைநீர் இவைகள் வகைக்கு 2½ தோலா இடித்துப்போட்டு பதமாகக்காய்ச்சி வடிகட்டி உபயோகிக்க பெண்களுக்குக் காணும் நோய்கள் விலகும். குறிப்பு:—வாராஹீகிழங்கு என்பதற்கு நிலப்பனைக்கிழங்கு என்று மலையாளத்தில் சொல்லுகின்றனர். ஆனால் நிலப்பனைக்கிழங்குக்கும் வாராஹீகிழங்குக்கும் சம்பந்தமிருப்பதாகத்தெரியவில்லை. அஷ்டாங்கஹிருதயம் ரசாயன அதிகாரத்தில் வாராஹீ என்பதற்கு விருத்ததாரகமென வியாக்யானத்தில் பொருள் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் வாராஹீ என்பதற்கு சக்ரதத்த வியாக்யானத்தில் லக்ஷணம் வேறுவிதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. வெற்றிலையைப்போன்ற இலைகளும் பன்றியின் மயிர்போன்ற மயிர்களுடன் கூடிய கிழங்கும் வாராஹீ என்பதன் லக்ஷணம். இந்த லக்ஷணம் தத்காலம் ஆல்வள்ளிக் கிழங்குக்குக் காணப்படுகின்றது. ஆனால் அதை வாராஹீ என்று சொல்ல வேறு பிரமாணங்களும் வேண்டியிருக்கின்றது. இக்கிழங்கு கிடைக்காவிட்டால் அதற்குப்பதிலாக நிலப்பனைக்கிழங்கை உபயோகிக்கலாம்.

## கிருதயோகங்கள்.

193. **மோதகத்வகாதி:**-காரைப்பட்டை, குருந்தொட்டி, தாருதாவல் பனைவேர், கருநொச்சிவேர், செம்பரத்தைவேர், வகைக்குப்பலம் 1½ அதாவது 6தோலா எடுத்துஇடித்து ஓர் பானையில்போட்டு ஜலம் சின்னப்படியில் 4 படிவிட்டு நாலில் ஒன்றாகக்காய்ச்சி வடிகட்டி ஓர் இரும்புசட்டியில்விட்டு அதில் பசு நெய் சின்னப்படி 1 விட்டு, தென்னைப்பூ, செம்பரத்தம்பூ, பசும்பால், வகைக்குச்சின்னப்படி 1 சேர்த்து, அதில் அமுக்கரா, தண்ணீர்விட்டான், திப்பிலி, திராக்ஷை, அதிமதுரம், சந்தனம், சர்க்கரை, ஏலரிசி, கல்மதம், வகைக்கு 1¾ தோலா பொடிசெய்துபோட்டு பதமாகக்காய்ச்சி உபயோகிக்க பெரும்பாடு, எலும்புருக்கி முதலியவை நீங்கும்,

194. **வாராஹாதி:**—வாராஹிகிழங்கு, கருங்காலி, நாவல் பட்டை, காரைப்பட்டை, குருந்தொட்டி, வகைக்கு 80 தோலா எடுத்து இடித்து பானையில்போட்டு சின்னபடி 16 ஜலம்விட்டு நாலில் ஒன்றாகக்காய்ச்சி வடிகட்டி இரும்புச்சட்டியில் விட்டு அதில் பசுநெய், ஆரைரசம், தண்ணீர்விட்டான்ரசம், பசும்பால் வகைக்கு சின்னப்படி 1 விட்டு அதில் விளாம்பழம், ஞாழல், மல்லிவிதை, செந்தொட்டி, பெருங்கோரைக்கிழங்கு, மலைதாங்கிவேர், திருபலை, மாம்பருப்பு, சிறுபீளை, ரஸாஞ்ஜனம், பேரீச்சம்பழம், கட்பலம், சுக்கு, திராக்ஷை, சிகப்புச்சந்தனம், புளிமா, இலவம் பிசின், தொட்டாச்சுருங்கி, தாமரைப்பூ, பெருவாகை, வெப்பாலை, நன்னாரி, காட்டாத்திப்பூ, அதிமதுரம், ரஸாஞ்ஜனம், மாதுளம்பழம், அதிவிடயம், கோரைக்கிழங்கு, லோத்திரப்பட்டை, பில்வம், காவிக்கல், திப்பிலி, அமுக்கரா, மாகாளி, விலாமிச்சவேர், கரும்புவேர், பாசுண்டை வகைக்கு 1¼ விராகனிடை பொடிசெய்துபோட்டுக்காய்ச்சிவடிகட்டி தேனும் சர்க்கரையும் சேர்த்து உபயோகிக்க யோனி ரோகங்கள் தீரும். குறிப்பு:—ரஸாஞ்ஜனம் என்பது ஓர்வித அஞ்சனக்கல் அது தக்காலம் கிடைப்பதில்லை. அதற்குப்பதிலாக மரமஞ்சள் கஷாயத்தில் பாலைச்சேர்த்து வெய்யிலில்வைத்து கெட்டியாகும்படி செய்து அதை எடுத்துக்கொள்ளவேண்டும். இதில் இரண்டு

தடவை ரசாஞ்ஜனம் வருவதால் இரண்டுபங்கு எடுத்துக்கொள்ளவும். இவ்விடத்தில் அஞ்சனக்கல்லைச் சேர்க்கும்படி மலையாள வியாக்யானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அது தவறு.

195. விருஷகிருதம்:—சமூலம் ஆடாதோடை இடித்துச்சார், அல்லது ஷடி கஷாயம் பசு நெய் வகைக்குப்படி 1 எடுத்து அதில் ஆடாதோடை புஷ்பத்தை கல்கமாக அரைத்துப்போட்டுக்காய்ச்சி பதமாகவடித்து தேன்சேர்த்து சாப்பிட காசம், சுவாசம், தீரும். குறிப்பு:—இவ்விடத்தில் ஆடாதோடை புஷ்பம் 8 தோலா சேர்க்க வேண்டும்.

196. விருஷகிருதம்:—முன்போல சமூலம் ஆடாதோடை இடித்து 8 பங்கு ஜலம்விட்டு எட்டில் ஒன்றாகக்காய்ச்சி அதை வடிகட்டி அதனளவு பசுநெய் சேர்த்து நெய் அளவில் எட்டில் ஒரு பங்கு ஆடாதோடை புஷ்பத்தை அரைத்து அதில் சேர்த்துப் பதமாகக்காய்ச்சி வடிகட்டித்தேன் சேர்த்து உபயோகிக்க ரக்த பித்தம் சமிக்கும்.

197. நிர்குண்டீகிருதம்:—கருநொச்சியிலைச்சார் பசுநெய் சமயிடையாகச்சேர்த்துப் பதமாகக்காய்ச்சி வடிகட்டி உபயோகிக்க, காசம் தீரும்.

198. தசாங்கம்:—புங்கை, வாய்விளங்கம், கொடுவேலி சடாமாஞ்சி, திரிபலை, திரிகடு வகைக்கு $1\frac{1}{2}$ தோலா பொடிசெய்து அதை ஓர் இரும்பு சட்டியில்போட்டு அதில் பசுநெய் சின்னபடி 1 விட்டு அதில் சிந்திற்கொடி, ஆடாதோடை, கண்டங்கத்திரிவேர், இந்த மூன்றையும் கஷாய முறைப்படி கஷாயம்செய்து அந்த கஷாயம சின்னபடி 1 சேர்த்துப் பதமாகக்காய்ச்சி உபயோகிக்க க்ஷயம், காசம், குன்மம், விக்கல் முதலியவை தீரும்.

199. சசவாசாதி:—முயல் மாமிச கஷாயம், ஆடாதோடை கஷாயம், பசும்பால், வகைக்குச்சின்னபடி 4, பசுநெய் சின்னபடி 1,

# குறிப்பு.

ஸம்ஸ்கிருத நூல்களில் சொல்லியுள்ள அரிய பெரிய மருந்துகளைச் செய்து கியாதிபெற தென்னாட்டினருக்கு வசதி மிகவும் குறைவாக விருக்கின்றது. பல ஆயுர்வேத மூலிகைகள் வடநாட்டிலேயே கிடைக்கின்றன. நமது நாட்டில் பல மூலிகைகளுக்குப் பெயரே தெரியவில்லை. தெரிந்த சில மூலிகைகளும் கிடைப்பதில்லை. மலையாளத்தில் சில மூலிகைகள் கிடைத்தபோதிலும் பல மூலிகைகள் அங்கும் துர்லபமாக விருக்கின்றன. நாம் பல வருஷங்களாக வடநாட்டிலிருந்தே பல மூலிகைகளை வரவழைத்து உபயோகித்து வருகிறோம். எல்லா வைத்யர்களுக்கும் அந்த மூலிகை முதலியவைகள் சுலபமாகக் கிடைக்கும்படி நாம் ஓர் மூலிகை ஸ்டோர் ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கின்றோம். தத்காலம் அடியில்கண்ட சரக்குகள் நமது கைவசமிருக்கின்றன. (1) பிடா லவணம் (2) ஸௌவர்ச லவணம் (3) கட்பலம் (4) விருத்ததாரகம் (5) நாகபலா (6) அம்லவேதஸம் (7) பத்மகம் (8) சுவர்ணமாக்ஷிகம் (பஸ்மம் செய்யாதது) (9) வைக்ராந்தம் (பஸ்மம் செய்யாதது) (10) ராஜாவர்தம் (11) ரஸாஞ்ஜனம். இவையனைத்தும் தென்னாட்டில் கிடைக்காத வஸ்துக்கள். வடநாட்டிலிருந்தே வரவழைக்கப்பட்டவைகள். காலக்கிரமத்தில் இன்னும் பல சரக்குகளையும் தயார்செய்ய உத்தேசித்திருக்கின்றோம். விலை விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

பண்டிட் S. நாராயண அய்யங்கார்,

நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து,

மதுரை.

Registered No. M. 4018.

# க்ஷயாந்தக ரஸம்.

க்ஷய நோய்களுக்கு (Pulmonary Tuberculosis) த
புயர் வற்ற மருந்தெனச் சுதேச நூல்களில் கூறப்பட்ட தாளக ப
மம், வைக்ராந்த பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக சிந்தூரம், ஆகிய
மூன்றும் அளவுப்படி சேர்க்கப்பட்டு க்ஷயாந்தக ரஸமென்ற பெ
ருடன், வெகு காலமாக அனுபவத்தில் பரிசீலிக்கப்பட்ட
மருந்து க்ஷய, நோய்களில் மிகுந்த குணம் கொடுக்கக் கூடிய
சுமார் 15 நாட்களுள் காய்ச்சல் முதலியவைகளைக் குறைத்துச்
மாதங்களுக்குள் பூர்ண சுகத்தை யளிக்கின்றது. 4, அல்லது
மாதங்களுக்குள் க்ஷய நோய் பூர்ணமாக நிவர்த்தியாகும். இ
டன் சுவர்ண பஸ்மம் சேர்த்துச் சாப்பிடுவதும் நாகபலா லே
யத்தை அனுபானமாகக் கொள்வதும் மிகவும் நல்லது.

---

| | | | | |
|---|---|---|---|---|
| க்ஷயாந்தக ரஸம் | ஒரு மாத | மருந்து. | விலை ரூ | 10 |
| ஷை ஸ்வர்ண சிந்தூரத்துடன் | ஷை | ஷை | விலை ரூ | 2[illegible] |
| நாகபலா லேகியம் | ஷை | ஷை | விலை ரூ | 5 |

தபால் செலவு வேறு.

---

மருந்தைக் காலை 6-மணி, சாயங்காலம் 6-மணி ஆக இர
வேளைகளில் தேனில் குழைத்துச் சாப்பிட வேண்டும். அ
கோதுமை, பருப்பு, தயிர், பால், நெய், வெண்ணை. பாதாம்பரு
சாரப் பருப்பு, ஆரஞ்சு, கொடிமுந்திரிப் பழம், ஜீர்ணமாகக் கூ ய
காய்கறிகள் முதலியன புஷ்டியாகச் சேர்த்துக் கொள்ளவும். சற்
காய்ச்சல் இருந்தாலும் ஸ்நானம் கூடாது. காய்ச்சல நின்ற பி
தைல ஸ்நானம் செய்யலாம்.

குறிப்பு:— மருந்தைப் பரீக்ஷை செய்ய விரும்பும் வைத்தி
களுக்கு மாத்திரம் க்ஷயாந்தக ரஸம் (ஸ்வர்ண சிந்தூர மில்லா
பாதிவிலைக்குக் கொடுக்கப்படும்.

விலாசம்:—

பண்டிட் நாராயண அய்யங்கார்.

2, நிர் போலிஸ் ஸ்டேஷன் மேல்புரம் சந்து, மதுரை.